Int 810.51

The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

Vol. XIII No. 2

EDITED BY

S. GOPALAN, B.A., B.L.,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Tanjore.

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1959 Saka 1881

Annual Subscription Rs. 4.

K. R. SARMA

The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XIII **No. 2**

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1959 S'aka 1881

Annual Subscription Rs. 4.

CONTENTS.

No.		Pages.
1.	Editorial	
2.	Research in Āyurvēda-Its Scope and Method —Sri K. Vāsudēva S'āstri B. A.,	1-6
3.	" ஆண்டாளும் காளிதாஸனும் " —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர், மீமாம்ஸா சிரோமணி.	7-20
4.	வேதவிஜ்ஞானம்-III. " ஒரு வருஷம் ஒரு நாள் " —நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	21-24
5.	सूक्तिमालिका—श्रीनारोजीपण्डितविरचिता द्राविडानुवादेन सहिता ஸ்ரீ நாரோஜீ பண்டிதரால் இயற்றப்பட்ட ஸூக்திமாலிகை தமிழ் உரையுடன்—நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்	9-16
6.	वैयाकरणसिद्धान्तकौमुदी—भट्टोजिदीक्षितकृता An Analysis in English by late Sri P. V. Nāganātha S'āstri (continued from Vol. XIII. No. 1.) —Sri N. S. Dēvanāthāchāriar, Meemāmsā S'irōmani.	131-138
7.	தன்வந்தரி வைத்யம்—Dr. S. Venkatarājan, L. I. M.	49-64
8.	श्रीमद्भागवत—माधवात्मजकृतमराठीभाषान्तर—प्रथमस्कन्ध —Sri G. Nāgarāja Rao.	81-96
9.	திருச்சோற்றுத்துறைத் தலபுராணம் —வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை	41-56
10	Minor works of S'rī Kṛṣṇānanda Sarasvati —Sri P. V. Varadarāja S'arma, M. A.,	2+4+38=44
11.	A New Recepi (English & Hindi)	
12.	Notes on Manuscripts " सुन्दरशृङ्गार " —Svānand	
13.	Our Exchanges	1-[illegible]

THE JOURNAL OF
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY.

Vol. XIII. A. C. 1959 S'aka 1881 No. 2

EDITORIAL

I have pleasure in placing Vol. XIII No. 2 of the Journal of Saraswati Mahal before the public. Of the three articles of research value the first is "Research in Āyurvēda — Its Scope and method". The learned contributor points out to the wholly unchartered field rich in treasures of Iatro-chemistry — Bhasmas, Sindūram, and the like used by Āyurvēdic, Siddha and Unāni Practitioners and pleads for a systematic research on "Marmas".

"There is however one topic in this connection which may be of special interest to our surgeons and it is the one on Marma or Vital areas which are like reservoirs of Prāna as in the case of the three principal marmas—Hṛdayam, Śiras, and Vasti or like Junctions of pranic currents as in the case of the other 107 marmas described in suśruta and other standard works of Āyurvēda. The importance of these marmas to the surgeon is that cuts and injuries to these vital spots are attended with severe and sometimes even fatal consequences. The surgeon is therefore warned to remember that there are some marmas which the surgeon's knife should never touch, some which may be touched at one inch distance and some, at two inches distance and so on. This is a teaching which admits of crucial testing by surgeons interested in the subject. (Page 118-119 - The science and the art of Indian Medicine by Captain G. Srinivasamurthi).

The second article is in Tamil, a comparative study of Āndāl and Kālidāsa. The third is Vēda Vijnānam entitled "One year is a day".

The serial publications are continued from the previous issue. A collection of minor poems written by Śrī Kṛṣṇānanda Sarasvatī is published for the first time, with an introduction in English.

S. Gopalan,
Editor.

Research in Āyurvēda - Its scope and method.

K. VĀSUDĒVA SĀSTRI.

Āyurvēda, the oldest and most glorious heritage of our country has yet to be studied systematically by collecting all the available texts and interpreting the concepts properly. It will then be possible to verify the statements made by our sages and either dismiss them as primitive, tolerate them as not advanced or adopt them as the highest truth on the subject. The Union Government has allotted some funds for research in Āyurvēda and started institutions at Jamnagar and other places.

GATHERING OF TEXTS AND THEIR PUBLICATIONS.

But the first step to be taken before research is begun is to collect systematically all the ancient manuscripts in the various oriental libraries and other places. After that, a collection of the factual statements in the texts will have to be made. The next step will be to understand the statements so collected by giving a proper interpretation of the concepts and processes mentioned in them. The identification of the organs and other parts of the body and of the drugs mentioned in the texts will be the next thing to do. All this has to be done as a preliminary to research.

For this preliminary work, a batch of scholars and doctors will have to go round and arrange for copies to be made of all rare and unpublished original texts in various languages both in the Oriental Libraries and in private possession. Funds will have to be provided for acquiring or getting copied texts in the private possession of individuals. The funds that are now allotted by the states for acquiring manuscripts are too meagre for acquiring any manuscript of value. The Centre has to sponsor the scheme either directly or through the State Gevernments. The really valuable texts will have to be published with translations in the principal vernaculars. A comprehensive Encyclopædia with illustrations to serve as a reference book will have to be begun.

The position today is that there are still a number of valuable texts, to be acquired or copied, edited critically and published. Even for the texts that have been published, translations in vernaculars have just begun to appear in Hindi, Marathi, Malayalam and Bengalee. The vast medical literature in Tamil which contains valuable material is a sealed book for the rest of India. There are valuable remedies and preparations which are treasured as trade-secrets by individuals. These must be made available to the public by means of some arrangement like patenting or acquisition of the prescriptions by handsome pay-

ment for publication. Āyurvēdic libraries with museum and herbarium attached must be started in various centres for doctors to get correct notions about the facts stated in Āyurvēdic texts. Research Institutions will have to be attached to each such centre with provision for an Āyurvēdic doctor, an allopathic doctor, a botanist, chemist and biochemist with necessary equipment for analysis and research. Each centre will have to issue bulletins of its research work. Periodical conferences for collecting the results of research and evaluating them will help the growth of knowledge. Today: even the results of research in the Calcutta school of Tropical Medicine, the Jamnagar Institute of Āyurvēdic Research and other research Institutions have not been made available to the public and to doctors by the transactions of these Institutes being supplied to all public libraries. An all-round effort has therefore to be made for the proper understanding, evaluation and utilization of the knowledge left to us by the sages of our country.

A word must be said about the attempts that are now being made to equate concepts of Āyurvēda with those in Allopathy and to promote the mutual understanding of the two schools by each other. The first thing to recognize in this attempt is that the diagnosis in Āyurvēda concerns itself more with the causes that have brought about the morbid condition of organs with a view to bringing them back to the healthy state, than with recognising their morbidity and supplying the deficiency or correcting the excess in their functions on account of such morbidity. The subject matter of diagnosis in Āyurvēda is therefore entirely different from the subject matter of diagnosis in Allopathy. Āyurvēda deals purely with etiology and it has systematized the etiological science in a splendid manner by generalising the knowledge regarding all ailments under the excess or deficiency of the three Dhātus or Dōshas, Vāta, Pitta and Kapha. Allopathy on the other hand has concentrated on Pathology and has made the deepest kind of research in the normal function of organs. The classification of diseases and their treatment in Āyurvēda is etiological whereas the classification and treatment in Allopathy is pathological. The three main factors which are the bed-rock of Etiology in Āyurvēda are practically ignored by Allopathy and there is no correspondence of concepts between them in the matter of diagnosis. classification and treatment of diseases. These two systems, in fact, form two different chapters of medicine and it must be recognised that the relation between them is that they supplement each other and not supplant each other. The attempt at equating the concepts of the two systems must therefore end in failure unless and until the Allopath recognises the components of living organism called Vāta, Pitta and Kapha.

There is also no correspondence between the names of diseases in the two systems. The most common ailment of fever is not recognised as a separate disease in Allopathy except fevers due to bacteria. Āyurvēda has on the other

hand classified fever according to the excess or deficiency of Vāta, Pitta and Kapha the particular Dhātu among the 7 Dhātus which is affected, and other causes. Many diseases which are attributed to causes connected with Vāta, Pitta and Khapha in Āyurvēda are attributed to bacteria in Allopathy. Pneumonia, Typhoid and T. B. are instances in point. Bacteria as agencies of diseases are not unknown to Āyurvēda, but those bringing about diseases are limited in Āyurvēda to those cases where the cause and effect can be unmistakeably recognised. In cases where bacteria begin to flourish as a result of or as an accompanying factor of the disease but cannot be unmistakably called the cause of the disease, the real cause which is not connected with bacteria is mentioned.

Even in the matter of anatomy, there are differences between the Allopathic system and the Āyurvēdic system. Attempts have been made to interpret the texts of Āyurvēda so that the anatomy and physiology mentioned therein may be in a line with what is stated in Allopathic text books. In some cases, this interpretation has involved the chiselling of the head to suit the cap. No less than Dr. Gananāth Sēn has attempted such a reconciliation. In Suśruta there are three terms 'Śira' 'Dhamani' and 'Srōtas'. Śirās are said to contain rakta (blood), Vāta, Pitta and Śleshma, and they are classified into 4 clauses namely, Rakta Śirā, Vāta Śirā, Pitta Śirā and Śleshma Śira, each containing more of the component by which it is named than the other components. The colours of the 4 kinds of Śiras are also clearly mentioned. Vāta Śirā is 'aruna' (colour of the rising sun), Pitta Śirā is blue, Ślēshma Śirā is white and rakta śirā is crimson. Thus Suśruta mentions four kinds of blood vessels. Their relative position has not however, been stated in Suśruta. The texts of seers and inspired savants that have been lost in our country are myraid judging from the names of authors mentioned in our ancient literature beginning from the Vēdas, and the recipes which are even now known by their names. It is just possible we might get at rare texts mentioning the relative point of the 4 kinds of blood vessels.

The 'Dhamanis' as their very name imports are hollow and are fit to be blown into. Their function includes the conveyance of sense impressions and they are said to be present in sets of two. This would naturally lead us to expect that Dhamanis are nerves. But among the functions of Dhaminis, are mentioned 'Pitta Vaha', 'Vāta Vaha', 'Sleshma Vaha' 'Rakta Vaha' and 'Rasa Vaha'. This has been interpreted to mean that "Dhamanis" are primarily carriers of blood, chyle, vāta, pitta and śleshma and rasa. The fact that carriers of rasa are among the 13 srotas or ducts open at both ends is coolly ignored, as well as the fact that the vessels carrying blood, vāta, pitta and ślēshma are called Śiras. The fact that Dhamanis are said to convey sense impressions and that they are formed in couples corresponding to the 'motor' and 'sensory' nerves is also ignored. This kind of interpretation is resorted to because of the desire to equate the number

and nature of blood vessels in the Āyurvēdic texts with those in the modern allopathic system and say that 'Śira' is the vein and 'Dhamani' is the artery.

In su pport of this interpretation Dr. Gananāth Sen relies on the fact that Suśruta as we find it is not the original text but one redacted by Nāgārjuna. Gran ting this position, it is not easy to swallow the argument that a redaction has involved misrepresentation in essentials. There are a number of commentaries on the text of Suśruta but not one of them has cast any doubt as to the authoritativeness of the text in this context or even elsewhere.

What appears to have suggested this interpretation is a verse describing the pulse. In that verse the pulse is described as धमनी जीवसाक्षिणी. Now it is a well-k nown fact that the pulse is felt on the artery wherever it is clearly exposed like the hands. So, Dhamani is translated as 'Artery'. But in books dealing with pulse, the pulse is called a 'Nādie' which means that which has a nāla or 'bore' and the whole nervous system is described for fixing the position of 'Iḍa and Piṅgala' on the hands and other parts of the body where the pulse is felt.

A proper understanding of the texts regarding 'Dhamani or Nādi' will be to understand that it is the nervous system which carries the kinetic physical energy which helps the flow of blood, Vāta, Pitta, Śleshma and Rasa in their several channels, the word 'Vaha' the carrier being interpreted as the *agency which helps the movement* instead *the thing which contains blood etc.* This interpretation will give the proper meanings to Śirā and Dhamani. As regards the feeling of the pulse, it is the kinetic physical force that is exerted by the nerves that are measured in the artery. If this interpretation is accepted, it may not be necessary to say that Dhamani is artery. The function of Dhamani in conveying sense impression will also fit in with the interpretation that Dhamani is nerve. This is a problem to be solved by deep research in Āyurvēda.

For studying anatomy of the human body exactly as it is without using the dissecting knife which may not present clearly the arrangement of the several tissues in their order, Suśruta prescribes an easy method. That is, that the dead body free from defects is spread over with kuśa grass, then bound with thread, placed carefully in a cage of wires or hard material and tied to a support in the bank of a river allowing the cage to float immersed in water. It is taken after 7 days, the thread and the grass are carefully cut and the body exposed for inspection. Athin splinter is used for turning over layer after layer of the body as the gummy connecting material between layers have been loosened by putrefaction. This will present the order of the tissues in the human body much better than the dissecting knife. Though lakhs are being spent for Āyurvēdic research, this method of studying the anatomy does not appear to have been tried. This must be

tried and the knowledge about the relative position of the several tissues and organs published by photos and descriptions.

Rasa is said to be converted into blood by admixture of bile in the liver in Āyurvēdic texts. The bile is said to be produced in the later part of the digestion in the stomach and is said to be transferred to the liver for converting rasa into rakta. On the other hand, the liver is described as the biggest gland from which issues bile, in Allopathy. How the products that go to form the bile enters the liver is not clearly explained in modern text books. This is again a matter for investigation and final decision arrived at whether the account in the Āyurvēda texts is right or wrong.

PHYSIOLOGICAL FACTS

The navel region is said to be the centre of the branching out of Dhamani and Sira and heart, the centre of circulation of rasa. These statements have to be carefully examined with reference to the relative position of organs as they are in the body with the help of the anatomical examination of the putrified body already referred to. The 107 points which are called 'marmas' which are clearly described in Suśruta have to be located and the information verified and published with charts for the benefit of surgeons, so that they may avoid these parts in surgery.

The presence of the material called 'Ojas' in 8 drops of pale yellow colour which is said to contain the essence of all the 7 dhātus in the living body has to be verified and a verdict given if the Āyurvēdic texts contain a positive falsehood. The Science regarding the feeling of pulse has to be clearly understood and verified. The statements in Āyurvēda have thus to be verified if the research which we purport to carry on in Āyurvēda is not to be a mere eye-wash, but real.

DIETETICS

I have indicated the line of work for real research in Āyurvēda. It is for the students of the Science to undertake the work and make our glorious inheritance live again. In the matter of dietetics also there are 2 aspects of diet that are studied in Āyurvēda, namely, (1) their nutritive value for building up the several dhātus and organs and (2) their contribution to the increase or decrease of Vāta, Pitta and Sleśhma. The Allopathic system practically ignores the second. This difference in the evaluation of dietetic articles strongly influences the prescription of regimen to patients. The ignoring of Vāta, Pitta and Slēśhma in the theraupeutic properties of articles of diet and drugs by the Allopaths causes great surprises to the practitioners of the two systems when one comes across the prescription of diet given by the other to the same patient. The first thing, therefore to be attended to for a comparative understanding by the two systems is to put to as severe a test as possible the therapeutic analysis of articles by Āyurvēda, namely, 'Rasa', 'Virya', 'Vipāka' and 'Prabhāva' on the one hand and their power of increasing or decreasing Vāta, Pitta and 'Khapa' on the other, and

the said analysis either adopted wholesale or with modifications or dismissed altogether as an illusory pseudo-science.

BHASMAS AND SINDŪRAS

The metallic preparations going by the name of bhasmas and sindūras have to be analysed as well as the preparations containing injurious chemicals, live arsenic, corrosive substitute, mercury etc., and the processes which help to make them safe prescriptions studied thoroughly and understood. Herbs that have miraculous powers attributed to them have to be gathered and their use for the various purposes put to the test and the results published, so that the treasure-trove of centuries of experience of our ancients may be opened up and made to serve the present and future generations.

ALCHEMY

A word about alchemy and the scope of research in this field will not be out of place in this connection. We have a number of texts on the processes on mercury and it is said that after mercury is subjected to 18 processes, we get to what is called the Vēdha stage in which it has the capacity to 'bore through'. The 'boring through' is of two kinds. One is called 'Dēha Vēdha' and the other 'Lōha Vēdha'. In the former case, the rays coming out of mercury in the Vēdha stage bore through the animal cell and make it proof against all diseases and poisonous and destructive agencies. In the second case, the rays bore through the 'atom' and convert baser metals into gold. The processes are clearly described in many books, and recently a very exhaustive text called 'Ānanda Kandam' has been published by the Saraswati Mahal Library, Tanjore, which is much fuller and clearer than the books published hitherto.

That alchemical processes have been tried and that they have impoverished many rich men is a fact. There seems to be a good reason why even after getting to know the herbs and processes from Bairagis, the house-holders have failed in their experiments. In every treatise on 'Alchemy', there is a chapter on what is called 'Dīksha', which consists of a disciplined life observing celibacy, prescribed diet, yogic practice and mantra japa. This 'Dīksha' is a condition precedant to succes in the alchemical experiments. This preliminary condition appears to have been necessitated for storing up electricity in the body of the performer of the experiment, which he has to use in the course of the experiment, as every atomic process (for such is alchemy) involves the use of electricity. It is worth while trying the experiment supplying electricity from outside, and seeing if both the kinds of 'Vēdhas' stated in our texts are true.

We have such a huge volume of texts already secured in medicine and alchemy especially in the Tamil country that an earnest attempt has to be made to see if all the generations of students who have carefully preserved these texts are misguided gullibles or there is truth in what they say.

"ஆண்டாளும் காளிதாஸனும்"

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர், வித்வான்,
ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

காளிதாஸ மஹாகவியின் இலக்கியங்கள் உலகப்பிரஸித்தமானவை. காதல்நிகழ்ச்சிகளை. அதிலும்–இளங்கன்னியரின் காதல்நிகழ்ச்சிகளைச் சித்தரிப்பதில் ஈடுஇணையற்றவர் அவர். துஷ்யந்தனைக் காதலித்த சகுந்தலையையும்; அக்நிமித்திரனைக் காதலித்த மாளவிகையையும், சிவபெருமானைக் காதலித்த் பார்வதியையும், முறையே — சாகுந்தல நாடகத்திலும், மாளவிகாக்நிமித்திர நாடகத்திலும், குமாரஸம்பவ மஹாகாவியத்திலும் நாம் காணும்போது இலக்கிய இன்பத்தின் சிகரத்தையே எட்டி விடுகிறோம். ஆண்டாளும் இளம்பிராய முதலாகவே கண்ணபிரானைக் காதலித்தாள். தனது காதல் நிகழ்ச்சிகளைத் தானாகவே இனிய செந்தமிழ்ப்பாக்களில் சித்தரித்துள்ளாள். இவையெல்லாம் ஒன்றையொன்று பிரதிபலிக்கின்றன. அதை ஈண்டு அனுபவிப்போம்.

சாதாரணமாகக் கவிகள், தமது கதாபாத்திரங்களின் வரலாறுகளைக் கூறும்போது, தாம் வேறு கதாபாத்திரம் வேறு என்னும் நினைவை இழந்து, அந்தந்த கதாபாத்திரமாகத் தாமே மாறிவிடுகின்றனர். அந்நிலையில்தான் அந்தந்த நிகழ்ச்சிச் சித்திரங்கள் அமைக்கப்படுகின்றன. அவ்வாறு எளிதில் மாறிவிடுவதற்கேற்ற பக்குவநிலை, கவிகளின் மனத்திற்கேற்பட்ட ஒரு தெய்விகத் தன்மையேயாகும். அவ்வாறு பக்குவமான இதயத்தில் கிளர்ந்தெழும் கற்பனைகளை, ரஸிகர்கள் இயற்கையில் நடந்ததாகவே எண்ணி இன்புறுவர். அகத்தில் தோன்றும் அற்புதமான கருத்துக்களைச் சுவை கெடாமல் பிறருக்கு வழங்குவதற்கேற்ற சொற்செல்வமும் கவிகளுக்கு அமையப்பெறவேண்டும். இதையே ஸ்ரீ வேதாந்த தேசிகர் :—

"स कविः कथ्यते स्रष्टा रमते यत्र भारती"

என்கிறார். கலைமகளின் கடாக்ஷம்பெற்றவன்தானே (நான்முகன்) படைக்கும் தொழிலில் முதன்மையாக விளங்குகிறான்? அதுபோலவே சொற்செல்வம் எவனிடம் தானாகவே குவிந்து கிடக்கின்றதோ அவன்தான் இணையற்ற இலக்கியங்களை ஆக்கமுடியும். உலகையெல்லாம் படைக்கும் கடவுளாகிய நான்முகனையும் இலக்கியங்களைப் படைக்கும் கவியையும் சிலேடையாக இதில் ஒரே அளவில் வைத்துப் பேசுகிறார் ஸ்ரீ தேசிகன். அத்துணை அருமை பெருமை வாய்ந்தது கவியின் செயல். சகுந்தலையையும், மாளவிகையையும், பார்வதியையும் தமது காவியத்தில் பேசவைக்கும் காளிதாஸர், தாமே அந்தந்தப் பாத்திரமாக மாறியே

பேசுகின்றார். இவ்வற்புதத்திலும் மேலான மற்றோர் அற்புதம் உண்டு. தலைமகள் (கதாநாயகி) தானே ஒரு சிறந்த கவியாகவிருந்து, தன் காதல்நிகழ்ச்சிகளைப் பேசுவதுதான் அவ்வற்புதம். இதைத்தான் ஆண்டாளின் தெய்விகக் காதல் சித்திரங்களில் கண்டு நாம் மெய்ம்மறந்து விடுகின்றோம். சிற்சில நிகழ்ச்சிகளை ஈண்டு விளக்குவோம்.

காதல் என்பது தெய்விகமானதோர் உணர்ச்சி. அதிலும் ஆண்டாளுடைய காதல் முற்றிலும் தெய்வத்தன்மை வாய்ந்தது. கோலமலர்ப்பாவைக்கன்பாகிய மாதவனொன்பதோ ரன்புதன்னையே காதலித்த ஆண்டாள், சிற்றின்பம்-பேரின்பம்-என்னும் வாசி தோற்றாதவாறு ஒரே வகையின்பமாகவனுபவித்தவள். பூமிப்பிராட்டியின் அம்சாவதாரமாகத் தோன்றியதனால் ஆண்டாளுக்குக் கண்ணனிடம் இயற்கையாகவே தோன்றிய காதல், பெரியாழ்வார் குடல் துவக்காலும் அக்காலத்திய பெரியோர்களின் இனிய உபதேசங்களை இடையறாது கேட்டுவந்ததனாலும் உரம்பெற்று, ஏரார்ந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கத்தின் அற்புதமான இனிய நற்குணங்களாலும் செயல்களாலும் வளர்ந்து, மீதூர்ந்து உள்ளடங்காமையால் பொங்கிவழிந்த சொற்களால் உலகுய்யும்வண்ணம் வெளித்தோன்றியதாயிற்று. அதனால் தமயந்தியின் காதல்போல் கேட்டலினால் தோன்றியதாகவும், பிறகு திருவாய்ப்பாடியில் நந்தகோபன் குமரனுடன் கூடியிருந்து குளிர்ந்த கோபகன்னியரின் வரலாற்றை எண்ணியெண்ணியுருகியதனால், தானுமவர்களிலொருத்தியாகிவிடும்படியான மனோநிலையில் ப்ரத்தியக்ஷமாகவும் இது நிகழ்ந்தது. இவ்வாறாக ஆண்டாளுடைய காதல்தானே "பக்தி"யாகிப் பரந்தாமனுடன் அவளைச் சேர்த்துவைத்தது. அதனால், மற்ற காவியங்களினூடே தோன்றும் கதாநாயகிகளின் சொற்களிற் காட்டிலும் ஆண்டாளின் இனிய தமிழ்ப்பாக்களில் சிறப்பான பல அம்சங்களைக் காண்கின்றோம். "[1]அனுபவத்துக்குப் பாசுரமிட்ட இத்தனையல்லது நெஞ்சோடே கூடக்கவிபாடிற்றல்ல வாய்த்து"; "[2]இனி காமமாவதுதான் பக்தி" என்னும் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் இக்கருத்தையே விளக்குகின்றது. இறைவன்பால் செலுத்தப்படும் அன்பு எத்தன்மையதாயினும், அதுதானே பக்திரூபமாகிப் பேரின்பத்தில் கொண்டுவிடும் என்பதே அடியார்கள் கண்ட உண்மை:—

"முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்
முகிழிளஞ் சிறுத்தாமரைக்கையும்,
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு
நிலையும், வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்,
அழுகையும், அஞ்சிநோக்கும் அந்நோக்கும்,
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்,

1. நாச்சியார் திருமொழி வியாக்கியானம் 6–11.
2. ,, ,, 8–1 (ப்ரவேசம்)

தொழுகையும் இவைகண்ட அசோதை
தொல்லையின்பத்திறுதி கண்டாளே.
(பெருமாள் திருமொழி 7—8)

என்பதுபோன்ற பாசுரங்கள் இதை விளக்கும். ஆதலின், உள்ளத்தில் ஓடும் பக்திப்பெருக்கில் மூழ்கித் தன்னையுமறந்து பேசும் பாசுரங்களாகிய இந்தத் தெய்வத் தமிழ் மாலையில் தன்னடையே இலக்கண இலக்கியப் பொருத்தங்கள் யாவும் நிறைந்திருக்கும்.

"பதினாறுமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்தன் வாயமுதம்
பொதுவாக வுண்பதனைப் புக்கு நீ யுண்டக்கால்,
சிதையாரோ? உன்னோடு செல்வப் பெருஞ்சங்கே!
(நாச்சியார் திருமொழி 7—9)

"மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கின்றேன், சொல் ஆழி வெண்சங்கே!" என்று எம்பெருமான் வாயமுதத்தையே நித்தமும் பருகும் பாஞ்சசன்னியத்தை விளித்து (இப்பதிகத்தில்) மாயன் செவ்வாயின் குணம் வினவுகின்றாள் ஆண்டாள்.

சாகுந்தலம் முதல் அங்கத்தில்;

"चलापाङ्गां दृष्टिं स्पृशसि बहुशो वेपथुमतीं
रहस्याख्यायीव स्वनसि मृदु कर्णान्तिकचरः ।
करौ व्याधून्वत्याः पिबसि रतिसर्वस्व मधरं
वयं तत्त्वान्वेषान्मधुकर! हता स्त्वं खलु कृती ॥"

என்னும் சுலோகத்தில் துஷ்யந்தன் வண்டைப் பார்த்துக்கூறும் வார்த்தை இங்கு தானகவே நமது மனதில் இடம்பெறுகின்றதல்லவா? சகுந்தலையும் தோழியரும் மரங்களுக்குத் தண்ணீர் கொட்டும்பொழுது, அங்கிருந்த ஒரு வண்டு சகுந்தலையின் கொவ்வைப்பழம்போன்ற இனிய அதரத்தைப் பறந்துவந்து கடிக்கின்றது. இளந்தளிர்போன்ற தனது கைகளால் அவள் அதை விரட்டுகின்றாள். அதுவும் இனிய ரீங்காரம் செய்துகொண்டு அவளுடைய காதினருகில் பறந்துசென்று, அவளது தலையைச் சுற்றிவந்து மீண்டும் அதரத்தையே அணுகுகின்றது. அது செல்லும் வழியெல்லாம் சகுந்தலை தனது கடைக்கண் பார்வையைச் (அதன் மீதே) செலுத்துகின்றாள் நடுக்கத்துடன். இதையெல்லாம் காண்கின்ற துஷ்யந்தன், "கடைக்கண்களால் பார்க்கப்பெறுதலும், உடலின் உறுப்புக்களைத் தங்குதடையின்றித் தொடுவதும், இனிய ஒலியுடன் காதினருகில் இரகசியம் ஓதுவதும்,

கைகளால் தடை செய்யப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் அதரபானம் பண்ணுவதும் எனக்கன்றோ வேண்டுவது ? நான் உண்மையை ஆராய்ந்தறிந்து கொள்வதற்காகக் காத்திருந்து கெட்டேன். வண்டே! நீயல்லவோ காரியவாதி!" என்று வண்டைப் புகழ்ந்து பேசுகின்றான்.

"... அவன் செவியில் மந்திரங்கொள்வாயேபோலும் வலம்புரியே! இந்திரனும் உன்னோடு செல்வத்துக் கேலானே" (நாச்-திரு, 7-4)

"... மதுசூதன் வாயமுதம் பன்னாளு முண்கின்றாய் பாஞ்சசன்னியமே!" (நாச்-திரு-7-5.)

"... சங்கரையா! உன் செல்வம் சால அழகியதே" (நாச்-திரு, 7-7)

என்னும் கோதைவாய்த் தமிழ்ப்பாக்கள் இங்கு நினைவுக்கு வருகின்றன.

சாகுந்தலத்தில், தோழியரிருவரும் சகுந்தலையை அவள் உடல் மெலிந்து போகின்றமைக்குக் காரணம் வினவுகின்றனர். அவளும், தான் துஷ்யந்தனைக் கண்டதுவே காரணமாக அவனிடம் காதல் கொண்டுள்ளமையைக் கூறித் தன் விருப்பம் ஈடேறாவிடில் தான் இறப்பது திண்ணம் என்று திட்டமாக அறிவித்து விடுகின்றாள்.[1]

தையொருதிங்கள்—என்னும் பதிகத்தில்,

"அவரைப்பிராயம் தொடங்கி யாதரித்தெழுந்த என் தடமுலைகள் துவரைப்பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுது வைத்தேன்" (நாச்-திரு, 1-4)

"ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த என் தடமுலைகள், மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" (நாச்-திரு, 1-5)
என்னும் பாசுரங்கள் இதே போக்கில் அமைந்துள்ளன.

"கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒரு நாள்
தங்குமேலென்னாவி தங்குமென் றுரையீரே. (நாச்-திரு, 9-7)

என்னும் பாசுரத்தில் ஆண்டாளுடைய திருவுள்ளத்தில் ஓடுகின்ற வேட்கையின் வேகத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்.

"जइ तस्स राएसिणो अणुकंपणिज्जा होमि तह णिव्वरेह अण्णहा सिंचइ मे उअअं"

என்று வியங்கியமாகக்கூறும் சகுந்தலையின் சொற்கள், ஸ்ரீ ஆண்டாளின் அனுபவகாவியத்தில் எவ்வாறு விளக்கம்பெறுகின்றன என்பதை ரஸிகர்கள் அனுபவிக்கவேண்டும்.

---

1 "जइ तस्स राएसिणो अणुकंपणिज्जा होमि तह णिव्वरेह । अण्णहा सिंचइ मे उअअं" என்பது சகுந்தலையின் வாக்கியம்.

"கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென்னும் இப்பேறு எனக்கருள் கண்டாய்" (நாச். திரு. 1-8)

என்னும் பாசுரம், சாகுந்தலத்தில்:-

"यथासुखन्ते संवाहयामि चरणावुत पद्मताम्रौ"

(தாமரை மலர்போல் சிவந்த உன் கால்களைப் பிடிக்கட்டுமா?)

என்னும் சுலோகத்தை நினைவூட்டுகின்றது. காதல் மீதூர்ந்த நிலையில், ஒரு நாட்டின் சக்கரவர்த்தியானவன், காட்டிலேயே பிறந்து வளர்ந்த காரிகையின் காலைப் பிடிப்பதைப் பெரும்பேருக நினைக்கின்ருன். குமாரஸம்பவம் மூன்ருவது ஸர்க்கத்தில், "ஒரு மான் தனது பெட்டையைக் கொம்பினுல் சொரிந்தது. பெட்டையும் கண்களை மூடிக்கொண்டு தன்னை மறந்து இன்பத்தில் ஆழ்ந்தது" என்று கூறுகிருர் காளிதாஸர். இவ்வாறு எல்லாப் பிராணிகளையும் நிலைகுலையச் செய்யும் காதற்கடவுளாகிய காமனுடைய தந்தையாரையே காதலித்த ஆண்டாளும் தன் காதலனுடைய கால்களைப் பிடிப்பதையே ஆசைப்படுகின்ருள்.

"முற்றத்தூடு புகுந்து நின்முகங்காட்டிப் புன்முறுவல்செய்து, சிற்றிலோடெங்கள் சிந்தையும் சிதைக்கக்கடவையோ? கோவிந்தா! முற்றமண்ணிடம் தாவி விண்ணுற நீண்டளந்துகொண்டாய்! எம்மைப் பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால், இந்தப்பக்கம் நின்றவர் என் சொல்லார்? (நாச். திரு. 2-9)

ஆண்டாள், த்யானம் முற்றித் திருவாய்ப்பாடியில் ஆயர்சிறுமியருள் ஒருத்தியாகி ஐந்துலக்ஷம் குடிப்பெண்களோடும் கூடிக் கிருஷ்ணனோடு விளையாடிக்கொண்டிருந்த காலம். கோப கன்னிகைகள் எங்கு சென்ருலும் கண்ணனும் தப்பாமல் அங்குற்றுத் தீம்புகள் செய்வதைக்கண்டு, அவன் கண்ணில் அகப்படாமல் இரகசியமாக ஒரு பெரிய வீட்டின் முற்றத்திற்குச் சென்று கதவுகளை நன்ருகத் தாளிட்டுக்கொண்டு சிற்றிலிழைத்து விளையாடிக்கொண்டிருந்தாள் மற்றச் சிறுமியருடன். கண்ணனுக்கு இவர்கள் ஒளிந்துகொள்ளுமிடமெல்லாம் மனப்பாடமாகையாலே திடீரென்று அவனும் அவர்கள் நடுவில் எப்படியோ வந்துசேர்ந்துவிட்டான், ஆநிரையில் புகுந்த காளைபோல். இவர்கள் பிரமித்துப்போய் வெட்கமடைந்து இவனைக் கவனிக்காதவர்கள்போல் சிற்றிலிழைக்கத் தொடங்கினர். அவனும் தனது திருமுகத்தைக் காட்டிப் புன்முறுவல் செய்து, இவர்களுடைய சிற்றிலையழித்துச் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லி இவர்களைக் கட்டிப்பிடித்து அணைத்துக்கொண்டு வம்புசெய்தான். இந்நிலையில் அவனைக் கடிந்து பேசும் பாசுரமிது. இதில் "எம்மைப்பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம் நின்றவரென்சொல்லார்?" என்னும் பகுதி மிகுந்த அர்த்தபுஷ்டியுள்ளது. இவ்வாருகக் கண்ணன், மேல் விழுந்து செய்யும் செயல்கள் யாவும் இவ்வாயர்சிறுமியர் பெரிதும் விரும்பும் செய்கைகளேயாகும். கண்ணனும் கட்டுக்கடங்காத காதல் வேகத்தில் "இது தகும் – இது தகாது"

என்பதை நிதானிக்காமல் ஏதேதோ செய்கின்றான். இவ்விதமான சந்தர்ப்பத்தையே அல்லும் பகலும் ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இவர்களும். தங்களது விருப்பம் ஈடேறியதால் இவர்கள் இன்ப வெள்ளத்திலேயே மிதந்து கொண்டிருக்கின்றனர் எனக் கூறினும் மிகையாகாது. ஆனால் வாயில் என்ன சொல் வருகின்றது? எம்மைப் பற்றி மெய்ப்பிணைக்கிட்டக்கால், இந்தப்பக்கம் நின்றவர் என்சொல்லார்? என்கிறார்கள். "எங்களுக்கு இதுவே வேண்டும் ஆனாலும் அருகில் இருப்பவர்கள் என்ன சொல்லுவார்களோ என்றுதான் அஞ்சுகிறோம்" என்கிறார்கள். இங்கு உரை எழுதியவர்,

"இத்தால் [1]ஸம்ச்லேஷம் வ்ருத்தமானபடி சொல்லுகிறது. "ஆண் பெண்ணாய் வார்த்தை சொல்லிற்றாகையன்றிக்கே, பெண் தனக்கே அதுக்கு மேலேயொரு மென்மை பிறந்து வார்த்தை சொல்லுகிற தென்னுமிடம் தோற்றியிருக்கிறபடி காணும்" என்று பிள்ளை தாமும் [2]வித்தராயருளிச் செய்தருளின வார்த்தை"

என்று விவரிக்கிறார் இதன் கருத்தை. பெண்கள் இருவகைப்படுவர். 1. ஆண் பெண், 2. பிறவிப்பெண் என்று. தோன்றும்பொழுது ஆணாகப் பிறந்து, பிறகு பெண்மையை ஏறிட்டுக்கொண்டு பேசுபவர்கள் ஆண்பெண் எனப்படுவர். பெண்ணாகவே பிறந்தவர்கள் பிறவிப்பெண் எனப்படுவர். ஆண்டாள் பிறவிப்பெண். ஆண்பெண்ணல்ல. அதனால் தன் காதலனது அடாத செய்கையைக் கடிந்துகொள்ளும் முகத்தால் அதில் தனது இசைவை இவ்வளவு மென்மையுடன் பேசுகின்றாள். இனி ஆண்பெண் என்று யாரைக் குறிப்பிடுகின்றார் உரைகாரர்? இதேபோன்ற தருணத்தில் அவர்களின் பேச்சு எவ்வாறாக அமைந்தது? இதைச் சிறிது விளக்குவாம்.

இறைவனொருவனே ஆண். அவனைத்தவிர்ந்த உயிர்வகைகள் எல்லாம் பெண்களே. "स्त्रीप्रायमितरत् सर्वं" (ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம்) "மற்ற உலகெல்லாம் பெண்மையுடையதேயாகும்" என்பது கருத்து. அதனால் புராண புருஷனாகிய பரந்தாமனையடைய விரும்புவோர் யாவரும் அவனைக் காதலித்தல் தான் அதற்கேற்ற ஒரேவழி. அது பிறவியிலேயே பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு இயற்கையாகவேயமைந்தது. பிறவியில் ஆணாகப் பிறந்தவர்களும் இறைவனைக் காதலித்து அவனை அடையலாம். ஆனால் அவர்கள் தங்களைப் பெண்மையுடையவர்களாகச் செய்துகொள்ளவேண்டும். பெண்மை இயற்கையில் இல்லாததால் அதை ஏறிட்டுக் கொள்ளவேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். இவர்களையே இங்கு ஆண்பெண் என்பது. அதேபோல் கவிதையில் தனக்குள்ள சக்தி

1. ஸம்ச்லேஷம் = கலவி. வ்ருத்தமானபடி = நடந்துள்ளமை.
2. வித்தர் = மிகுந்த ஈடுபாடுடையவர் (वित्तर्)

விசேஷத்தால், தான் எடுத்துக்கொண்ட கதாபாத்திரங்களுள் பெண்ணாகப் பிறந்தவர்களின் மனோநிலையைச் சித்தரித்துக் காட்டும் ஒப்புயர்வற்ற கவி சிரேஷ்டர்களும் கூட ஆண் பெண்களேதான் முந்திய வகையைச் சார்ந்தவர்கள் ஆழ்வார்கள். பிந்தியவகையைச் சார்ந்தவர்கள் - காளிதாஸன் முதலிய மஹாகவிகள். இவ்விருவகை ஆண் பெண் கவிகளின் கவிதையிலிருந்தும் சில உதாஹரணங்களைக் காட்டி இக் கட்டுரையை முடித்துவிடுகின்றோம்.

சாகுந்தலத்தில், சகுந்தலையும் துஷ்யந்தனும் மாலினீ நதிக்கரையில் கொடி வீட்டில் உடன் கூடுகின்றனர். நல்ல நடுப்பகல்வேளை. கடுமையான வெயில். அடர்ந்த கொடிகளின் நிழலும் ஆற்றங்கரையின் குளிர்ந்த காற்றும் மற்ற குளிர்ச்சியைத் தரும் தோழியரின் உபசாரங்களும் இனியமொழிகளும் சகுந்தலை யின் தாபத்தைத் தீர்க்கவில்லை. துஷ்யந்தனும் ஆற்றாமை மீதூர்ந்து அங்கு வந்து அருகில் மறைந்துகொண்டிருக்கின்றான். தோழியரிருவரும் வெகு சாமர்த் தியமாக இருவரையும் சேர்த்துவைக்கின்றனர், தகுந்த பாதுகாப்புடன். உடனே ஒரு வியாஜத்தால் தோழியரிருவரும் வெளிபோகின்றனர். காதலர்களிருவரும் தனிமையிலுள்ளனர்.

சகுந்தலா :— தோழியீர்! காப்பாற்றுவாரின்றியிருக்கின்றேன். உங்கள் இருவருள் ஒருத்தி (என்னுடன் இருக்க) வரவேணும்.

தோழியர் :— உலகையே காப்பாற்றுபவன் உன் சமீபத்தில் இருக்கின்றான் (என்று சொல்லிச் சென்றுவிடுகின்றனர்)

சகு. :— என்ன இது? போய்விட்டார்களே!

துஷ்யந்தன் :— கலங்கவேண்டாம். உனக்குரிய பணிவிடைகள் செய்ய நான் அருகிலேயே காத்திருக்கின்றேன். குளிர்ந்த தாமரை இலைகளால் விசிறு கின்றேன். தாமரைபோல் மெல்லிய உன் செவ்வடிகளைப் பிடிக்கின்றேன்.

சகு :— மரியாதைக்குரியவர்களிடம் என்னைக் குற்றவாளியாக்கிக்கொள்ள மாட்டேன் (என்று எழுந்து செல்ல முயற்சிக்கிறாள்)

துஷ். :— அழகியே! பகல்வேளை கழியவில்லை. உன் உடல்நிலையும் இவ்வா றிருக்கின்றது. ...... (என்று பலாத்காரமாக அவளைத் தடுத்து நிறுத்துகின்றான்)

சகு. :— புருவம்சத்தரசே! விநயத்தைக் காப்பாற்றும். மன்மதனால் மிகவும் பீடிக்கப்பட்டவளாயினும், எனக்கு நானே அதிகாரியில்லை.

துஷ். :— அச்சமுடையாய்! பெரியோர்களிடம் பயப்படாதே. தர்மத்தை யறிந்தவரும் பூஜிக்கத்தக்கவருமாகிய குலபதி (கண்வர்) இதையறிந்தாலும் குற்றமாகக் கொள்ளமாட்டார். மேலும், பல அரசகுமாரிகள் காந்தருவ

முறையில் தமது காதலர்களை மணந்துள்ளனர். அவர்களது பெற்றோரும் உவகையுடன் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சகு. :— விடுங்கள் என்னை. மீண்டும் தோழியருடன் சேர்ந்துகொள்ளு கிறேன்.

துஷ் :— ஆகட்டும், விடுகிறேன்.

சகு :— எப்போது?

துஷ். :— உனது இனிய அதரத்தின் ரஸத்தைப் பருகினவுடன் (என்று கூறி அவளது முகத்தை நிமிர்த்த முயற்சிக்கின்றான்)

சகு :— (அபிநயத்தால் – தடுக்கின்றாள்)

இந்த ஸந்தர்ப்பத்தில் காட்சியில் மாறுதல் ஏற்படுகின்றது. துஷ்யந்தன் மறைந்துகொள்ளுகின்றான். தோழியரும் அத்தைக் கிழவியும் வந்து சகுந்தலையை அழைத்துச்செல்கின்றனர்.

இனி மாளவிகையின் வரலாற்றைச் சிறிது விளக்குவோம். அக்னி மித்திரன் என்னும் அரசனுடைய அந்தப்புரத்தில் பட்டமஹிஷியான தாரிணீ தேவியின் பணிப்பெண்களிலொருத்தி "மாளவிகை." இவளுடைய அழகைக் கண்ணுற்ற அரசன் இவள்மேல் மோகங்கொள்கின்றான். இவளும் அரசனிடம் காதலுறுகின்றாள். வகுலாவலிகை என்னும் இவளுடைய தோழி, உண்மையை யுணர்ந்து வெகு சாமர்த்தியமாகக் காதல்திருமணத்தை நடத்திவைக்கிறாள். மூன்றாவது அங்கத்தில் பூங்காவில் ஒருதரமும், நாலாவது அங்கத்தில் ஸமுத்திர க்ருஹத்தில் (ஜலயந்திர கிருஹம்) மற்றொருதரமும் காதலர்கள் சந்திக்கின்றனர். மூன்றும் அங்கத்தில் ஒரு அசோகமரம் பூக்கவில்லை. உத்தம ஸ்த்ரீக்கள் தனது இடது பாதத்தால் அம்மரத்தை உதைத்தால் அது புஷ்பித்துவிடும். இந்தப் பணியில் மாளவிகை நியமிக்கப்படுகின்றாள். அப்போதுதான் அவளையே எண்ணியெண்ணி ஏங்கிக்கொண்டிருக்கும் அக்னிமித்திரனும் அங்கு வந்து சேர்கின்றான்.

விதூஷகன் :— (அருகில் வந்து) அரசன் அருகிலிருக்கையில் அசோக மரத்தை இடதுகாலால் உதைப்பது தருமா?

இருவரும் :— (மாளவிகை-வகுளாவலிகை) அந்தோ! அரசன்!! அரசன் வாழ்க.

விதூஷகன் :— வகுலாவலிகே! எல்லாமறிந்த நீ இந்தத் தவறுதலான செய்கையினின்றும் இவளை ஏன் தடுக்கவில்லை?

வகு :— ஐயா! இவள் தேவியின் (பட்டமஹிஷியின்) கட்டளையை நிறைவேற்றுகின்றாள். இந்தத் தவறுதலில் இவள் பொறுப்பாளியல்ல. அரசர் அருள் புரியவேணும் (என்று சொல்லித் தன்னுடன் மாளவிகையையும் வணங்க வைக்கிறாள்)

அரசன் :— இவ்வாறாயின் நீ குற்றமற்றவளே. எழுந்திரு அம்மா! (என்று தன் கைகளால் மாளவியைத் தூக்கி நிறுத்துகின்றான்)

விதூஷகன் :— சரி, தேவியே இங்கு போற்றத்தகுந்தவள்.

அரசன் :— அழகியே! இளந்தளிர்போல் மென்மையான உன் இடதுகால், கடினமான மரத்தில் மோதியதனால் நோவுபடாமலிருக்கின்றதா?

மாளவிகை :— (நாணத்தை அபிநயிக்கின்றாள்)

மாள :— வகுளாவலிகே! வா. கட்டளையை நிறைவேற்றியதாக தேவியிடம் விண்ணப்பம் செய்வோம்.

வகு :— அரசனிடம் விண்ணப்பம் செய்துகொள் — விடுங்களென்று.

அரசன் :— அன்பே! போகலாம். இத்தருணத்தில் நான் ஒன்று யாசிக்கின்றேன். கேட்கவேண்டும்.

வகு :— கவனமாகக் கேள். அரசர் கட்டளையிட வேண்டும்.

அரசன் :— நானும் வெகுநாளாக உறுதிகுலைந்து தளர்ச்சியுற்றிருக்கிறேன். இவ்வாசையையும் உனது ஸ்பரிசத்தால் நிறைவேற்ற வேண்டும்.

இத்தருணத்தில், அருகில் ஒளிந்துகொண்டு இவற்றையெல்லாம் கவனித்து வந்த அரசனுடைய தேவியரில் ஒருத்தி திடீரென்று இவர்களை அணுகுகின்றாள். காட்சி மாறுபடுகின்றது

நாலாவது அங்கத்திலும் இவ்வாறே நிகழ்கின்றது. சகுந்தலையும் மாளவிகையும் சிறந்த கட்டழகிகளாக இருந்தாலும் தாய்தந்தையரில்லாத அனாதைகள். தன்னை எடுத்து வளர்த்தவரையே எல்லா உறவினராகவும் பாவித்து வந்தனர். இந்நிலையில் காதலுக்கேற்ற பருவம் வந்ததும் எதிர்பாராதவிதமாக நாட்டின் மன்னன்மேல் மையலுற்றனர். ஆருயிர்த்தோழியர் இதை யுணர்ந்து காதல் திருமணத்தைச் சிறப்பாக நடத்திவைத்தனர். மேலும் இவ்விரண்டும் நாடகம். பல்லாயிரவர் முன்னிலையில் அரங்கில் நடிக்கப்படவேண்டியது. நாடகங்களின் இலக்கணங்களுடைய வரையறைக்குட்பட்டே நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கமுடியும் இவற்றில். பல விஷயங்களைப் பிரத்தியக்ஷமாகக் காட்டக்கூடாது என்று தடைகள் நாடகங்களுக்குள்ளன. அவைகள் நாடக இலக்கியத்தை மேம்பாடுடையதாகச் செய்வதற்காகவே வகுக்கப்பட்டனவாகலின்,

கவிகள் அவற்றை மீறிச்செல்ல இயலாது. அதனால் ரஸமான கட்டங்களில் திறமையாகக் காட்சி மாறுபடுத்தப்பட்டுவிடும். ரஸிகர்கள் ஊகித்தறிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு நம்மையறியாமலே நம் மனத்துள் இனிமையான வரலாறுகள் பதிந்துவிடக்கூடிய பக்குவத்தில் கதைப் போக்கை அமைப்பதில் தான் கவிகளின் திறமை மாறுபடுகின்றது. இத்துறையில் காளிதாஸர் ஈடு இணையற்றவரென்பது உலகம் முழுதும் ஒருமனதாகக் கூறும் தீர்வு.

உலகிற் சிறந்த இவரது இலக்கியங்கள், அலங்கார லக்ஷணங்களிலும், த்வனிக்ரந்தங்களிலும் பலகாலும் உதாஹரணமாகக் காட்டப்படுகின்றன. பெண்மக்கட்கு அதிலும் முதன் முதலில் காதல் நிகழ்ச்சிகளில் அகப்படுகின்றவர்கட்கு இயற்கையான நாணத்தையும் அச்சத்தையும் மேலே குறிப்பிட்ட இரண்டு உதாஹரணங்களிலும் அடிக்கடி காண்கின்றோமல்லவா? இவைதான் இளம் காதலியின் மனதில் ஓடும் உணர்ச்சி வெள்ளத்தை உரியவிடத்தில் தக்கவாறு திரையிட்டு மூட்டுவதற்கும், அதே சமயத்தில் வாசகர்களுடைய அல்லது காண்கின்றவர்களுடைய மனத்தில், திரையிடப்பட்ட அவ்வுணர்ச்சிகளைச் சொல்லாமல் சொல்வதற்கும் இவரால் அடிக்கடி சாதனமாக உபயோகிக்கப்படுகின்றன. மாளவிகையிடமும் சகுந்தலையிடமும் சக்களத்திப் பொறாமையை அடிக்கடி காண்கின்றோம். ஏனெனில் அவ்விருவருடைய காதலர்களும் ஏற்கெனவே பல ஸ்த்ரீரத்னங்களை மணந்தவர்கள், அதனால் அந்த நாயகிகள்மேல் அசூயை தோன்றுவதியல்பே. இவ்விரு நாடகங்களிலும் கதாநாயகர்களான ஆண்கள் விஷயத்தில்போல் பெண்கள் விஷயத்திலும் முழு வெற்றி இந்தக் கவிக்குக்கிட்டியதா என்பதை ரஸிகர்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும். சகுந்தலையோ அல்லது மாளவிகையோ, தனது வரலாற்றை ஒரு நாடகமாகவோ-காவியமாகவோ எழுதியிருந்தால்; அவற்றில், வெட்கம் - பயம் - இவற்றால் அடிக்கடி திரையிடப்படும் பற்பல உணர்ச்சிகள் மிகவும் பொருத்தமாகச் சுவை கெடாமல் விளக்கப்படும் என்றே நினைக்க இடமுண்டாகின்றது. ஆண்டாளுடைய கன்னித்தமிழ்ப் பாக்களைக் காண்கையிலேயே நமக்கு இந்நினைவு தோன்றுகின்றது.

சகுந்தலை, மாளவிகை இவர்களைப்போலவே ஆண்டாளும் ஒரு தாயில்லாத பெண்தான். பெரியாழ்வாரால் பரிவுடன் வளர்க்கப்பட்டு வந்தமையின் அவரையே தாயாகவும் தந்தையாகவும் எல்லா உறவினராகவும் பாவித்துவந்தான். பல்லாயிரம் பெண்மணிகளுக்குக் கணவனாகவிருந்த கண்ணனையே தானும் காதலித்தாள். ஐந்து லக்ஷம் கன்னியரையும் கூட்டிக்கொண்டு எல்லோரையும் உய்வித்துத் தானும் உய்ந்தாள். ஆண்டாளுடைய காதல்நிகழ்ச்சிகளில் ஓர் இடத்திலும் துவேஷம், அசூயை,பயம் இவற்றைக் காண்கின்றிலோம். சாதாரணமான ஆண்களிற் காட்டிலும் கண்ணனுடைய ஆண்மை விலக்ஷணமானமைதான் இதற்குக் காரணம். அவன் யோகேச்வரன், புராணபுருஷன், உத்தமபுருஷன்,

புருஷோத்தமன். நித்திய யுவா. அதனால் இவ்வளவு பேருக்கும், இன்னும் பல்கோடி நூறாயிரம் பெண்மக்கள் வந்து சேர்ந்தாலும் அனைவர்க்கும் இன்ப நுகர்ச்சியில் குறைவு வாராது. சாதாரணமான யோகி ஸௌபரி மகரிஷி. அவர் ஒரே ஸமயத்தில் நூறு கன்னியரை மணந்துகொண்டு, தானும் நூறு சரீரம் எடுத்துக்கொண்டு எல்லோருடனும் இன்புற்றிருந்தார். யோகேச்வரனாகிய கண்ணனைப்பற்றிக் கேட்க வேண்டுமா ?

"கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணுமூர் பேருமரங்கமே." (நாச். திரு. 11–9)

"போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை" (நாச். திரு. 8-10)

என்னும் ஆண்டாளுடைய வாய்ச்சொல்லாலேயே இதையறியலாம். சகுந்தலை துஷ்யந்தனை மணந்துகொண்ட வரலாற்றையறிந்த கண்வர் "புகையால் கண் கலங்கிய நிலையிலும் யஜமானனுடைய ஹோமம் தைவாதீனமாய் நெருப்பிலேயே விழுந்தது" என்று உவகையுடன் அதை ஏற்கிறார். "ஒரு மகள் தன்னை யுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன் செங்கண் மால்தான் கொண்டுபோனான்" என்னும் பெரியாழ்வார் திருமொழிப் (8—4) பாசுரம் இதே ரீதியில் அமைந்துள்ளது.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே ஆண்டாளுடைய காதல் தோன்றி வளர்ந்து வந்தமையின் வெட்கமறியாத நிலையிலிருந்தே கண்ணனுடைய அழகில் ஆழங்கால்பட்டாள் இவள்.

"முற்றிலாத பிள்ளைகளோம்........." (நாச். திரு. 2—6)

"பேதநங்கறிவார்களோ டிவை பேசினால் பெரிதின் சுவை
யாதுமொன்றறியாத பிள்ளைகளோமை நீ நலிந்தென்பயன் ?"
(நாச் திரு 2—7)

"வட்டவாய் சிறு[1] தூதையோடு சிறுசுளகும் மணலுங்கொண்டு
இட்டமா விளையாடுவோங்களை........" (நாச். திரு. 2--8)

என்னும் பாசுரங்களினின்றும் இதையறிகிறோம். அதனாலும்; அதேபோல் கண்ணனும் இவர்களுடனே இணைபிரியாது விளையாடிக்கொண்டிருந்ததனாலும் பயம் என்பது இவ்வரலாறுகளில் முக்கியஸ்தானம் வகிக்கவில்லை. "தண்ணீர்" என்றால் தண்ணீரே கொண்டுவரும்படி பாலைகளாயிருக்கிற வெங்களை நெருக்கினால் உனக்கென்ன பலமுண்டு? என்பது வியாக்கியானம் இவ்விடத்தில்.

1. தூதை = பானை.

"காதல்" என்னும் பெயரால் வழங்கப்படக்கூடிய பருவத்துக்கு முன்பிருந்தே ஆண்டாள் கண்ணனிடம் பிரேமைகொண்டிருந்தமையையும், கண்ணன் மட்டும் உண்மையான காதல் ரூபமாகவே அவ்வன்பை ஏற்றுத் தானும் காதல் லீலைகளைப் புரிந்ததையும் இதிலிருந்து நன்கறியலாகின்றது. அதனால்தான் போலும் அச்சம் என்பது சிறிதளவும் இங்கு இடம்பெறவில்லை. இறைவனிடம் காதல் கொள்வதும், அதனால் அவனை வசப்படுத்தி அவன் திருவடிகளைப் பெறுவதும், அனைவருக்கும் தவிர்க்கமுடியாத உரிமையல்லவா? தனக்குரிய ஒரே வழியில் தான் செல்லப்புகுங்கால் ஏன் பயப்படவேண்டும்? மாளவிகாக்நிமித்ரம் மூன்றாவது அங்கத்தில், பூங்காவில் தனிமையிலுள்ள மாளவிகை கூறுகின்றாள்:— "பயமின்றி, சற்றுநேரம் மனம்விட்டுப் புலம்புகின்றேன்" என்று. அப்புலம்பல் எவ்வாறிருக்கக்கூடுமென்பதை :—

> "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள்
> தங்குமே லென்னாவி தங்கும்". (நாச். திரு அ. எ.)

என்பதுபோன்ற ஆண்டாளுடைய தெய்விகக் காதல்பாக்களில் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்.

சகுந்தலையும் மாளவிகையும் தமது தோழியரைத் துணையாகக்கொண்டு தங்கள் காதலை நிறைவேற்றிக் கொண்டனர். மானிடவர்க்கத்தில் காதல் கொண்டமையின் அது சாத்தியமாயிற்று. ஆண்டாள் காதலித்தது பரந்தாமனையேயாதலால் இதில் தோழியர் எவ்வாறு துணைபுரிய முடியும்? மிகவும் சிக்கலான பிரச்னையாகிவிட்டதல்லவா இது? ஆண்டாள் என்ன கூறுகிறாள்?

> "நல்ல என் தோழி! நாகணைமிசை நம் பரர்
> செல்வர், பெரியர், சிறு மானிடவர் நாம் செய்வதென்?
> வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
> * வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" என்கிறாள்.
> (நாச். திரு. 10—10)

தன் தகப்பனாரிடம் குழந்தைக்கு எவ்வளவு உறுதியான நம்பிக்கை? பெரியாழ்வார் திருவுள்ளப்படி நடப்பது தனது கடமையென்றல்லவா எம்பெருமான் நினைத்திருப்பது?

விஷ்ணுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலனாகிய பரந்தாமனைப் பல வழிகளால் வருவிக்கவல்லவர் பெரியாழ்வார். ஒன்று காண்மின்!

> "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த
> மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்

* வல்லபரிசு—தம்மால் கூடிய வழிகளாலே.

தம்மை யுகப்பாரைத் தாமுகப்பரென்னும் சொல்

தம்மிடையே பொய்யானால் சாதிப்பா ராரினியே? (நாச் திரு. 11-10)

"என்னிடம் உண்மையான பிரேமை கொண்டவர்களிடம் நானும் அன்பு கொள்வேன்" என்பது கண்ணன் தேர்த்தட்டிலே அர்ச்சுனனுக்குச் சொல்லிய வார்த்தை. "அதை விஷ்ணுசித்தர் கேட்டிருப்பர்" என்கிறாள். கேட்டிருந்தாலென்ன? சொன்னபடி செய்தேயாகவேண்டும். 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ—அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" என்னும் சரம சுலோகத்தின் கருத்தை ஆண்டாள் மொழிபெயர்த்த அழகு பாரீர்! "தம்மையுகப்பாரைத் தாமுகப்ப ரென்னும் சொல்" என்கிறாள். இறைவனது அன்பு நமக்கு வேண்டுமாயின் அதற்காக முதலில் அவனிடம் நாம் அன்பூண்டொழுகவேண்டும். இது உண்மையானால் அது தானாகவே கிட்டும் என்னும் அடிப்படையில், தனது தூய்மையான [1]காதலையேயன்றி வேறு உபாய மற்ற நிலையில் ஆண்டாள் பேசுகின்றாள். உலகில் "பாதி கல்யாணம் நிச்சயம்" என்று வேடிக்கையாகச் சொல்வர். அது உண்மையாயிருப்பின் மற்றொரு பாதி தானாகவே கலந்து பூர்த்தி செய்துவிடுமென்பதைச் சொல்லிலும் செயலிலும் ஆண்டாள் நிரூபித்துவிட்டாள். அவன் சொல் அவனிடமே பொய்யானால் வேறு யார் கட்டுப்படுத்தவல்லாருளர்? அவன் ஸர்வேச்வரனல்லவா? ஒருக்காலும் பொய்பாகாதென்றபடி. இவ்விடங்களிலெல்லாம், குலஸ்த்ரீகள் தம் கணவனை மரியாதையாக வழங்கும் "தாம்' என்னும் சொல்லாலேயே ஆண்டாளும் பரந்தாமனைக் குறிப்பிடுகின்றாள். காளிதாஸரின் இலக்கியத்திலிருந்து இரண்டு சந்தர்ப்பங்கள் உதாகரிக்கப்பெற்றன.

இனி ஆழ்வார் பாசுரத்தில் ஒரு உதாகரணம் காட்டுவோம்.

"கன்மமன்று எங்கள் கையில் பாவை பறிப்பது கடல்ஞால முண்ட
நின்மலா! நெடியாய்! உனக்கேலும் பிழை பிழையே
வன்மையே சொல்லி எம்மை நீ விளையாடுதி அதுகேட்கில் என்னைமார்
தன்ம பாவ மென்னார் ஒரு நான்று தடிப்பிணக்கே" (திருவாய்மொழி-6-2-7)

ஒரு தலைமகளின் தன்மையில் ஆழ்வார் அருளும் பாசுரம் இது. "கண்ணா! நீ இவ்வாறு எங்களிடம் விளையாடுவதை எங்கள் உடன்பிறந்தார் (ஆண் மக்கள்) கேட்டால், கோபமுற்றுத் தடியடிச்சண்டையிலிழிவார்கள். என்றாவது ஒருநாள் இவ்வாறு நடைபெறுவது திண்ணம்" என்கின்றனர் கோப கன்னிகைகள். கண்ணன் செய்யும் காதல் லீலைகளில் தங்களுக்குள்ள இசைவையே இச் சொல்லால் அறிவிக்கின்றனர். ஆயினும் "எம்மைப்பற்றி மெய்ப்பிணக் கிட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்வார்?" என்பதிலுள்ள மென்மை இதில் காணப்படவில்லை என்பது உரைகாரருடைய கருத்து.

---

[1] यमेवैष वृणुते तेन लभ्यः ।

இவ்வாறு ஆண்பெண் கவிகளுடைய கற்பனைகளையும் அனுபவங்களையும் இயற்கைப் பெண்ணாகிய ஆண்டாளுடைய செஞ்சொற்கவிகளில் சிறந்த முறையில் அனுபவிக்கின்றோம். இக் கருத்தையே ஸ்ரீவேதாந்ததேசிகர், தமது கோதா ஸ்துதியில் [1]"ஆண்டாள்! உன் மனத்துக் கினியானை நீ அனுபவித்தபடியே தாங்களும் அனுபவிக்க விருப்பங்கொண்ட உனது குருமார்கள் (ஆழ்வார்கள்) தங்களுக்குள்ள பக்தியைக் காதலாக மாற்றிப் பலவிதமான இனிய காதல் நிகழ்ச்சிகளைப் பேசுகின்றனர்" என்கிறார். "ஆழ்வார்களும் பிராட்டிமார் பாசுரத்தாலே தங்களாசையைப் பேசக்கடவராயிருப்பார்கள்". "புருஷன் புருஷனைக் கண்டு ஸ்னேஹிப்பதிலுங்காட்டில், ஸ்த்ரீ புருஷனைக்கண்டு ஸ்னேஹிக்கை பண்ணமடையாகையாலே" என்பன உரைநூலிலுள்ள வாக்கியங்கள்.

எவ்வளவுதான் மேன்மையுடன் இருப்பினும்,

"என் கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள்
தங்குமேலென்னாவி தங்கும்"

"எம்மைப்பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம் நின்றவர்
என் சொல்லார்?"

என்பதுபோன்ற பெண்மக்களுக்கே தோன்றக்கூடிய கருத்துக்களை மற்ற ஆண்-பெண் கவிகளின் இலக்கியங்களில் காண்பதரிது. இதுவிஷயத்தில் தீர்வுகூறுவதற்கும் பெண்மக்களே தகுதியுள்ளவராவார் என்பது எமது கருத்து. இதனால் உலகப் பிரசித்தமான கவிகோகிலங்களைக் குறைத்துச் சொல்வதாக வாசகர்கள் கருதமாட்டார்கள் என்பது திண்ணம். காவிய இலக்கணங்களின்படி குற்றமெனக் கொள்ளக்கூடியனபோல் தோன்றும் பகுதிகளும் அவ்வாறில்லாமல் இனியவையாய்த் தோற்றுவது பக்திப்பாடல்களுக்கே ஏற்பட்ட தனிச் சிறப்பாகும். "கன்றிழந்த தலைநாகு தோற்கன்றுக்கும் பால்சுரக்குமாப்போலே" என்கிறபடி ஆண்டாளுடைய அனுபவமாகிற பெருங்கடலின் திவலை போன்ற இப்பாசுரங்கள், பின்புள்ளாரையும் இறைவனருள் பெறச்செய்யும் தன்மையன. இலக்கிய இன்பத்தோடு இறைவனருளையும் இதன்மூலம் பெற்றுவிடலாமல்லவா? இதுவே இதன் தனிச்சிறப்பு. இதுபோலவே ஆண்டாளுடைய பாடல்களில் மேகஸந்தேசம், இயற்கை வருணனைகள், உபமானங்கள், இத்துறைகளிலும் பல அரிய பெரிய கருத்துக்கள் ஆராய்ச்சிக்குத் தக்கவை. அவற்றைப் பிறகு விளக்குவோம். இப்போது எடுத்துக்கொண்ட விஷயத்திலும் விரிவைத் தவிர்க்கவேண்டி ஒன்றிரண்டு உதாரணங்களையே காட்டிப்போந்தோம். அன்பர்கள் அருள்கூர்ந்து கடைக்கணிக்க வேண்டும்.

---

[1] भोक्तुं तव प्रियतमं भवतीव गोदे भक्तिं निजां प्रणयभावनया गृणन्तः ।
उच्चावचै र्विरहसंगमजै रुदन्तैः शृङ्गारयन्ति हृदयं गुरव स्त्वदीयाः ॥ (गोदास्तुतिः)

"ஒரு வருஷம் ஒரு நாள்"

நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியார், வித்வான்,
ஸரஸ்வதி மகால், தஞ்சாவூர்.

"एकं वा एतद्देवाना महः । यत्संवत्सरः ।" (तै-ब्रा-3—9—22)

(ஏகம் வா ஏதத்தேவாநா மஹ: யத் ஸம்வத்ஸர:)
(தை-ப்ரா-3—9—22)

என்னும் வேதவாக்கியம், "நம் கணக்கில் ஒரு வருஷமெனப்படுவது, தேவர்களுக்கு ஒரு நாள்" என்கின்றது. ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது நமக்கு ஒரு நாள், அறுபது நாழிகை கொண்டது. *360 நாட்கள் (360 இரவும் 360 பகலும்) சேர்ந்து நமக்கு ஒரு வருஷம் ஆகின்றது. பூமி தன்னைத்தானே ஒருதரம் சுற்றிக் கொள்வதனால் இரவும் பகலும் உண்டாகின்றன. சூரியன் தெரியக்கூடிய பாகத்தில் பகலும், மற்றப் பகுதியில் இரவும் நிகழ்கின்றன. இவ்வாறு சுழன்று கொண்டேயிருக்கும் பூமி, வானவீதியில் வட்டவடிவமாக ஒரு வழி ஏற்படுத்திக் கொண்டு அவ்வழியில் வேகமாய்ச் சூரியனைச்சுற்றி வந்துகொண்டேயிருக்கின்றது. ஆகாய மார்கத்தில், பூமி சூரியனைச்சுற்றி ஒரு பிரதக்ஷிணம் வந்தாகிவிடுமாயின், அந்தக் காலத்தைப் பூமியில் வாழும் நாம் "ஒரு வருஷம்" என்கிறோம். ஆதியந்தமில்லாத "காலத்தை" அளந்து காட்டுவதற்கு, இரவு பகல் மாதம் வருஷம் இவை அளவுகோலாக அமைகின்றன. நமது சாஸ்திரங்களில் காலத்தின் உண்மை நிலையும், அது பல்வேறு பெயர்களால் அளவிடப்பட்டு வழங்கப்படும் விதங்களும் அற்புதமாக விவரிக்கப்பட்டுள்ளன. ஸூர்யஸித்தாந்தம் என்னும் நூலில் தொடக்கத்தில் உள்ள சில சுலோகங்களின் கருத்துச் சுருக்கம் இங்கே எழுதப்படுகின்றது.

"காலம் உலகங்களையெல்லாம் (தோற்றுவித்து) அழிக்கும் தன்மையது. (இது இரு விதம்:- அளவிடமுடியாதபடி எங்கும் பரந்துள்ள மஹாகாலம் ஒன்று.) மற்றொன்று அறிந்துகொள்ளக்கூடியது. பிந்தியது, ஸ்தூலம்—ஸூக்ஷ்மம் (பெரியது - சிறியது) என இருவகைப்படும். இதுவே, மூர்த்தம்—அமூர்த்தம் எனப்படும். பிராணன் (ஒருவன் மூச்சுக் காற்றை உள்ளே இழுத்து வெளியில் விடும் காலம்) முதலானது மூர்த்தம். த்ருடி (நொடி)

---

* "त्रीणि च शतानि षष्टिश्चाक्षराणि तावती संवत्सरस्य रात्रयः" — तै-सं-2-5-9
(த்ரீணி ச சதானி ஷஷ்டிச்சாக்ஷராணி தாவதீஸ்ஸம்வத்ஸரஸ்ய ராத்ரய:)
கருத்து — ஒரு வருஷத்துக்கு 360 இரவுகள் (நாட்கள்)

போன்றவை அமூர்த்தங்கள். ஆறு "பிராணன்" கொண்டது ஒரு "விநாடி" யாகும். அறுபது "விநாடி" கொண்டது ஒரு "நாழிகை"யாகும். அறுபது "நாழிகை" கொண்டது, நக்ஷத்திர ஸம்பந்தமான இரவுபகலாகும். முப்பது இரவும் பகலும் ஒரு ஸாவநமாஸமாகும். முப்பது சூரியோதயங்களாலும் ஒரு ஸாவந மாஸம் கணக்கிடப்படும். அதுபோலவே முப்பது திதிகளால் திங்கள் (சந்திரன்) மாதம் கணக்கிடப்படும். சூரியன் ஒரு இராசியினின்றும் மற்றொரு இராசியில் செல்லும் கணக்கினால் ஸௌரமாதம் கணிக்கப்படும். இவ்வாறான பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷமாகும். அதுவே தேவர்களுடைய ஒரு நாளாகும். அசுரர் களுக்கும் அப்படியே. அதாவது:— தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இரவு பகல், மாதம், வருஷம் இவை ஒரே விதமானவைதான். ஒரே ஒரு வாசி மட்டும் இதில் உண்டு. தேவர்களுக்கு இரவாக இருக்கும் காலம் அசுரர்களுக்குப் பகல். அசுரர்களுக்கு இரவாக இருக்கும் காலம் தேவர்களுக்குப் பகல். அவ்வாறான 60 நாட்கள் தேவர்களுக்கு ஒரு ருது. அந்த ஆறு ருதுக்கள் தேவர்களுக்கு அல்லது அசுரர்களுக்கு ஒரு வருஷம்" என்று ஆங்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

சூரிய ஒளி இருக்கும் காலம் பகல், அதில்லாத காலம் இரவு என்பது மட்டும் எல்லோருக்கும் பொதுவான விதி. சில இடங்களில் சூரிய வெளிச்சம் 6 மாதம்வரை தொடர்ந்து இருத்தலும் – இல்லாமையும் நிகழ்கிறது. அவ்விடத் தின் ஒரு இரவு பகல் நமது ஒரு வருஷத்திற்குச் சமம்.

பூமியின் வட – தென் துருவங்களில் இதுபோன்ற நிகழ்ச்சி உள்ளது. "அரோரா போலாரிஸ்" (Aurora Polaris) அல்லது "அரோரா போரியாலிஸ்" (Aurora Borealis) என்று வழங்கப்படும் ஒருவகை ஒளி வடதுருவப் பிரதேசத் திலும், "அரோரா ஆஸ்ட்ராலிஸ்" (Aurora Australis) என்று வழங்கப்படும் ஒளி தென் துருவப் பிரதேசத்திலும் மாறிமாறி ஆறு மாதம் தொடர்ந்து காணப் படுவதும், மற்ற ஆறு மாதம் தொடர்ந்து காணப்படாமல் இருப்பதும் இற் றைக்கும் நிகழ்கின்றது. இந்த விசித்திரமான ஒளியைப்பற்றிப் பலவாறாக ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதன் தத்துவத்தை விஞ்ஞானிகள் கூர்ந்து கவனித்துவருகின்றனர். உத்தராயணம் எனப்படும் ஆறு மாதங்களில் வடதுருவத்தின் சமீபத்தில் தொடர்ந்து இவ்வெளிச்சம் காண்கின்றது. அவ் வாறுமாத காலமும் ஆங்கு ஒரே பகலாகவே இருக்கும். ஆனால் தென் துருவப் பிரதேசத்தில் அவ்வாறுமாத காலமும் ஒரே இரவாக இருக்கும். தக்ஷிணாயனம் எனப்படும் ஆறு மாதங்களிலோவெனில் இதற்கு நேர்மாறான நிகழ்ச்சியிருக்கும். தென் துருவப் பிரதேசத்தில் ஒரே பகலாகவும் வடதுருவப் பிரதேசத்தில் ஒரே இரவாகவும் இருக்கும். இவ்வொளி, தக்ஷிணாயனம் – உத்தரா யணம் இவற்றிற்கேற்ப இடம் மாறிக் காணப்படுவதனாலும், சூரியனிடம் இருப்பதாகக் கருதப்படும், பச்சை – மஞ்சள் – ஊதா – சிவப்பு போன்ற பல

நிறங்களுடனும் காணப்படுவதனாலும் இது சூரியவொளியே என்பது உறுதிப் படுகின்றது. " அருணன் " எனப்படும் சூரியனுடைய தேர்ப்பாகனைப்பற்றி நமது புராணங்களிலும் வேதத்திலும் கூறப்படுகின்றது. அவன் செந்நிறமான வன். துடைகள் இல்லாதவன். சூரியனுடைய தேரை ஓட்டிவருபவன். (அதாவது சூரியன் வரும்போதெல்லாம் முன்னே இவன் வருவான்) என்பன சில வருணனைகள். " உஷஸ் " என்று வழங்கும் பின்மாலைவேளைக்கும் " அருணீ " என்று வேதம் பெயர் இட்டழைக்கின்றது. [1]" उषा अरुणी " (உஷா அருணீ) என்பதைக் காண்க. பின்மாலைவேளைகளில் சூரியோதயத்துக்கு முன்பு வானத்தில் செந்நிறமான ஒளி பரவுவதையே இப்பெயர்கள் காட்டுகின்றன. Aurora (அரோரா) என்னும் சொல்லில் – அருண – என்னும் சொல்லின் ஒற்றுமை இருப்பது கண்கூடு. ஸ்டாக்ஹோம் முதலிய துருவப் பிரதேசத்திலுள்ள நகரங்களில், மாதக்கணக்காக வெயில் தொடர்ந்து காய்கின்றது. இரவு வேளை என்பது அங்கு அப்பொழுது இல்லவே இல்லை. அதற்காகக் கருப்பான திரையை, சன்னல்களில் கட்டித் தொங்கவிட்டுக் கதவுகளையும் மூடி சில நாழிகை காலத்தை இரவாக்கிக் கொண்டு ஆங்குள்ள மானிடர்கள் உறங்குகின்றனர். இந்நிகழ்ச்சியை மேற்கூறிய வேதவாக்கியம் குறிப்பதாகக் கொள்ளக்கூடும். அதாவது ஆதிகாலத்தில் இவ்விடங்களில் வசித்துவந்த மக்களில் ஒரு முனையில் இருந்தவர்களைத் தேவர்களென்றும், மற்றொரு முனையிலிருந்தவர்களை அசுரர்களென்றும் வழங்குதல் பொருத்தமுடைத்து என்றபடி.

வான வெளியில் ஒவ்வொரு கிரஹமும் தனக்கென்று ஒரு வட்டப் பாதையை வகுத்துக்கொண்டு அதிலேயே தவறாமல் சுற்றி வருகின்றது. அந்தப் பாதையில் ஒரு சுற்று வருவதற்காக ஏற்பட்ட காலத்தையே அந்தந்த கிரஹங்களில் வசிப்பவர்கள் ஒரு வருஷம் எனக் கொள்ளவேண்டும் அந்தக் காலத்துக்குள் தன்னையும் அவை சுற்றிக்கொள்கின்றன. அதற்கான காலத்தையே இரவும் பகலுமாகிய ஒரு நாளென்கிறோம். பூமியைப் பற்றினவரை அது தனது வட்டப் பாதையில் ஒரு தரம் சுற்றி வருவதற்குள் தன்னைத்தானே 365 தரம் சுற்றிக் கொள்கின்றது. அதனால் நமக்கு ஒரு வருஷத்துக்கு 365 நாட்கள். சூரியனுக்கு மிகவும் அண்மையிலிருக்கும் புதன் என்னும் கிரஹம், தனது சுற்றுப்பாதை முழுதும் கடப்பதற்குள் தன்னைத்தான் ஒரு தரம்தான் சுற்றிக்கொள்கிறதாம். இவ்வேத வாக்கியம் அதைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அல்லது தேவலோகம் என வழங்கப்படும் ஏதாவதொரு கோளத்தில் நமக்குண்டான ஒரு வருஷமே ஒரு நாளாக இருக்கலாம். அதாவது நம் கணக்கில் 360 வருஷத்தில் ஒரு சுற்று வரும் கிரகங்கள் இந்தச் சூரிய குடும்பத்திலோ அல்லது வேறு சூரிய

1. தைத். ஸம். காண்டம் 5, பிரச்னம் 6; அனுவாகம் 4.

குடும்பத்திலோ இருக்கக்கூடும். அவ்விதமான கிரகங்கள் தன்னைத்தான் ஒரு தரம் சுற்றிக்கொள்ள (நம் கணக்கில்) 1 வருஷம் ஆகும். அந்நிலைமைச்சியைக் குறிப்பதாகவும் இவ்வேத வாக்கியம் கொள்ளப்படலாம். இன்னும் ஏதேனும் வேறு முறைகளும் இருக்கக்கூடும். இதை வானிலை ஆராய்ச்சியாளர்கள்தான் தீர்மானிக்கவேண்டும். இரவு என்பதே இல்லாமல் பகல் மட்டுமே சிலவிடங்களில் இருப்பதாகவும் உபநிஷதங்களில் கூறப்படுகின்றது. सकृद्दिवा हैवास्मै भवति — (ஸக்ருத்திவா ஹைவாஸ்மை பவதி) என்னும் உபநிஷத் வாக்கியம் இக்கருத்தையே கொண்டது. காலமெல்லாம் பகலாகவே இருப்பது என்பது நிகழக்கூடிய விஷயமா-அது சாத்தியமா என்றெல்லாம் சாதாரணமாக ஐயம் உண்டாவதியல்பே. ஆனால் வேதம் கூறும் தத்துவம் ஒருகாலும் பொய்யாகாது என்னும் முழு நம்பிக்கையுடன் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இதுபோன்ற விஷயங்களில் பதிந்துள்ள உண்மை நன்கு புலனாகும். இதுபோலவே, பகல் என்பதையே அறியாத உலகங்களும் இருக்கின்றன. அங்கு சூரிய ஒளி என்பதே தெரியாது. எக்காலமும் ஒரே இரவுதான். ஒரே இருட்டுதான். கொடிய பாவங்களைச் செய்பவர் அந்த உலகங்களில் வாழவேண்டியவர்களாகப் பிறந்து கஷ்டப்படுவர் என்கிறது வேத வாக்கியம்.

"असूर्या नाम ते लोकाः अंधेन तमसावृताः"

(அஸூர்யா நாம தே லோகா அந்தேந தமஸா வ்ருதா:)

என்னும் உபநிஷத் வாக்கியம் மேற்கூறிய கருத்தையே கொண்டது. காலம் என்பதன் பல்வேறு நிலைமைகளையும் நமது புராணங்களும் வேதங்களும் உபநிஷதங்களும் ஆங்காங்கு நன்றாக எடுத்துக் காட்டுகின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்தறிவது நம் நாட்டவரது கடமைகளுள் முக்கியமானதொன்றாகும்.

अथ दैवपद्धतिः

सर्वेषा मुपकाराय गृह्यते जन्म सज्जनैः ।
दशावतारा धर्मार्थे गृह्यन्ते विष्णुना सदा ॥ २३ ॥

महता यद्धृतं हस्ते तद्याति परमोन्नतिम् ।
शिवहस्तधृतं शूलं तनुते मंगलं नृणाम् ॥ २४ ॥

हरिनाम्नि वने तीर्थे नदीनाञ्च जले तथा ।
स्वीयत्वं नास्ति कस्यापि सर्वेऽप्यत्रा धिकारिणः ॥ २५ ॥

इक्षुकाण्डा द्र[illegible]पाम्रि माक्षिकं मक्षिकामुखात् ।
पट्टसूत्रं कीटमुखात् जायते दैवकारणात् ॥ २६ ॥

नालिकेरफले तोयं माक्षिकं सरघामुखे ।
जलजन्तुषु मुक्ताश्च दैवेनैवो पकल्पते ॥ २७ ॥

இனி தைவ பத்ததி.

நல்லோர்கள், எல்லோருடையவும் உபகாரத்திற்காகவே பிறவியை மேற்கொள்வர்; தர்மத்தைக் காப்பதற்காகவே எப்பொழுதும் திருமால் பத்து அவதாரங்களைப் பண்ணுகிறார். (உ௩)

பெரியோர் ஒரு பொருளைக் கையில் ஏந்தினால் அது மிகமிகவுயர்ந்துவிடும். சிவனுடைய கையால் தரிக்கப்பட்ட சூலம் மக்களுக்கெல்லாம் நன்மையையே செய்கின்றது. (உ௪)

திருமாலின் திருநாமம், காடு, புண்ணிய தீர்த்தம், ஆற்று நீர் இவற்றில் எவருக்கும் தனியான உரிமை கிடையாது. இவற்றில் எல்லோரும் உரிமையுள்ளவர்கள். (உ௫)

கருப்பங்கழியினின்றும் இனிய சாறும், தேனீயின் வாயினின்றும் தேனும், பட்டுப் பூச்சியின் வாயினின்றும் பட்டுநூலும் தைவத்தின் காரணமாகத் தோன்றுகின்றன. (உ௬)

தேங்காயினுள் இளநீரும், தேனீயின் வாயில் தேனும், நீருள் வாழும் பிராணிகளுள் முத்தும் தைவத்தினாலேயே உண்டுபண்ணப்படுகின்றன. (உ௭)

जपः प्रयत्नो मन्त्रश्च स्वप्नश्च ज्योतिषं तथा ।
कालानुकूल्ये फलति नास्तिचे द्विफलः श्रमः ॥ २८ ॥

भोक्तव्य मागतं दुःखं धैर्यं मानं न संत्यजेत् ।
पश्चा त्सुखं भवत्येव दैव मेवात्र कारणम् ॥ २९ ॥

कालेन दुःख मायाति कालेन च मह त्सुखम् ।
कालस्यैव वशे सर्वं बुद्धि रत्र न कारणम् ॥ ३० ॥

दुःखं न तिष्ठति चिरं सुखन प्यागमिष्यति ।
दुःखं भुक्त्वा सुखं प्राप्ता नलरामयुधिष्ठिराः ॥ ३१ ॥

भोगार्थं तु शरीरं हि जायते पूर्वकर्मतः ।
तत्र दुःखं सुखञ्चैव क्रमादेवा भिजायते ॥ ३२ ॥

ஜபம் செய்தல், மனிதனுடைய முயற்சி, மந்திரம், கனவு, சோதிடம், இவையெல்லாம் நல்லகாலமிருந்தால்தான் பலிக்கும். அஃதில்லையேல் சிரமம் பயனற்றதாகிவிடும். (௨௮)

துன்பம் வருமாயின் அதை(த்துணிவுடன்) அனுபவிக்கவேண்டும். தைரியத்தையும் மானத்தையும் கைவிடக் கூடாது. பிறகு சுகம் கிடைப்பது திண்ணம். தைவமே இவற்றின் காரணம். (௨௯)

துக்கம் அதற்கேற்ற காலத்தில் வந்து சேருகின்றது. மகத்தான சுகமும் உரிய காலத்தில் வந்து சேரும். (ஆதலால்) எல்லாம் காலத்தின் ஆட்சியிலேயே உள்ளது. இதில் புத்தி காரணமில்லை. (௩௦)

துக்கம் வெகுகாலம் நீடிக்காது. சுகமும் வரும். பெரும் துக்கத்தை யனுபவித்த பிறகு, நளமகாராஜன்—இராமன்—தருமபுத்திரர்—இவர்கள் சுகத்தை யடைந்தனர். (௩௧)

சுகதுக்கங்களை அனுபவிப்பதற்கேற்றதான (இந்த) உடம்பு முன்வினையின் பயனாகவே உண்டாகின்றது. அதில் துக்கமும் சுகமும் (வினைப்பயனாக) முறைப்படியே வரும். (௩௨)

दैवं स्वतन्त्रं सहजं ज्ञायते न कदाचन ।
गर्भिणी पृच्छति प्रश्नं पुत्रो वा कन्यकेति वा ॥ ३३ ॥

भार्या जातानुरागा भजति तनुभुवः सादरं भक्तिभाजो
मित्राणि प्रीतिमन्ति प्रभु रतिदयते बांधवाः स्वान्तरङ्गाः ।
किं वा वक्ष्यामि ? चित्रं! रिपुरपि भजते भीतितः प्रीतभावं
जाते दैवानुकूल्ये सकलमपि जग ज्जायते स्वानुकूलम् ॥ ३४ ॥

इति दैवपद्धतिः ॥

"தைவம்" சுதந்திரமானது (யாருக்கும் கட்டுப்படாதது). (ஒவ்வொருவருக்கும்) உடன் பிறந்தது. (ஆனால்) ஒருபோதும் அறியப்படுவதில்லை. ஒரு உதாரணத்தால் இதையறியலாம். ஒரு கர்ப்பிணியான ஸ்த்ரீயின் வயிற்றில் உள்ள சிசு, ஆணு பெண்ணு என்பது அவளுக்கே தெரிவதில்லை. அதற்காக அவள் ஜோஸ்யரை "ஆரூடம்" கேட்கிருள். தன் வயிற்றினுள் இருப்பதைத் தானேயறிய முடியவில்லை! அதுபோலவே நிழல்போல் தன்னைத் தொடர்ந்துவருவதும் தன்னுடன் பிறந்ததுமாகிய தைவத்தையும் அவரவர் அறிய முடிவதில்லை. ஆனால் தைவம் இருப்பது மறுக்கமுடியாத உண்மை. (தைவம் = அவரவரது நல் – தீவினை.) (௩௩)

மனைவி பேரன்புள்ளவளாயிருக்கிருள். தாய் தந்தையரிடம் பக்தியுள்ள குழந்தைகளைப் பெற்றுப் பரிவுடன் பேணி வளர்க்கிருள். அன்புள்ள நண்பர்கள் பலர். அரசனும் அதிகமாகக் கருணை காட்டுகிருன். உற்ருருறவினர் யாவரும் அந்தரங்கமாக (ஆழ்ந்த அன்புள்ளவர்களாக) இருக்கின்றனர். இவ்வற்புதத்தை என்னென்று சொல்வேன்? பகைவனுங்கூட பயத்தினுல் அன்புள்ள தன்மையை அடைகிருன். தைவம் அனுகூலமானுல் உலகம் முழுதும் தனக்கு அனுகூலமாகவே மாறிவிடுகின்றது. (௩௪)

தைவ பத்ததி முற்றும்.

अथ नीतिपद्धतिः ॥

जन्मनो भूषणं कीर्तिः, पत्नी गेहस्य भूषणम् ।
स्वाकृते भूषणं विद्या, सुपुत्रः कुलभूषणम् ॥ ३५ ॥

[1] श्रेयसो भूषणं दानं, दया दानस्य भूषणम् ।
दयाया भूषणं शान्तिः, शान्ते र्ज्ञानन्तु भूषणम् ॥ ३६ ॥

नरस्य भूषणं कीर्तिः, स्त्रीणां लज्जा तु भूषणम् ।
सर्वेषां भूषणं विद्या, विद्याया भूषणं क्षमा ॥ ३७ ॥

दिनस्य भूषणं सूर्यो, निशाया भूषणं शशी ।
देशस्य भूषणं राजा, जन्मनो भूषणं यशः ॥ ३८ ॥

विप्रस्य भूषणं विद्या, शौर्यं क्षत्रियभूषणम् ।
वैश्यस्य भूषणं वित्तं, सन्नतिः शूद्रभूषणम् ॥ ३९ ॥

இனி நீதி பத்ததி.

பிறவிக்கு அழகு புகழ் வீட்டிற்கழகு மனைவி. நல்ல வடிவத்திற்கழகு கல்வி. நல்ல மகன் குலத்திற்கழகு. (௩௫)

செல்வத்திற்கழகு ஈதல் (தானம் பண்ணுதல்). ஈதலுக்கழகு இரக்கம். இரக்கத்திற்கழகு சாந்தி (மன அமைதி). சாந்திக்கழகு அறிவு. (௩௬)

மானிடர்க்கழகு புகழ். பெண்மக்கட்கழகு நாணம். எல்லோருக்கும் அழகு கல்வி. கல்விக்கழகு பொறுமை (சகிப்பு–அடக்கம்). (௩௭)

பகலுக்கழகு ஆதவன். கங்குலுக்கழகு திங்கள். நாட்டிற்கழகு அரசன். பிறவிக்கழகு புகழ். (௩௮)

அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் முறையே, கல்வி–வீறு–பொருள்–வணக்கம், இவையழகாம். (௩௯)

---

1. धर्मार्थावुच्यते श्रेयः कामार्थौ धर्म एव च । अर्थ एवेहवा श्रेयः कामार्थौ धर्म एव च ॥ என்னும் மனுஸ்மிருதி வசனத்தைத் தழுவி இங்கு 'श्रेयः' என்பது செல்வமெனப்பட்டது.

सन्तोष एव सर्वेषां तुष्टिपुष्टिबलप्रदः ।
वने वायुतृणाहारा नागा स्तुष्टा बलोत्कटाः ॥ ४० ॥

सामान्यं सर्वजन्तूनां भुक्ति र्निद्रा रतं भयम् ।
मनुष्येषु विशेषोऽयं ज्ञानं दानं दया क्षमा ॥ ४१ ॥

पुण्यं सत्यं दया दानं शान्तिः क्षान्तिः शमो दमः ।
परलोकस्य पाथेयं गच्छन्त मनुगच्छति ॥ ४२ ॥

दाना न्नास्ति परो धर्मो दाना न्नास्ति परं यशः ।
दाने लीना गुणा स्सर्वे तस्मा द्दानपरो भवेत् ॥ ४३ ॥

पूर्वपुण्यागतं वित्तं तस्य दानन्तु सार्थकम् ।
तद्दानं क्षमया युक्तं पात्रे दत्तं महत्फलम् ॥ ४४ ॥

சந்தோஷமொன்றே (அகமகிழ்ச்சி) யாவருக்கும் உளநிறைவு-செழுமை-வலிவு-இவற்றைத்தரவல்லது. காட்டில் காற்றையும் புல்பூண்டுகளையுமே உணவாகக்கொண்டுள்ள பாம்புகளும் யானைகளும் மகிழ்ச்சியுடனும் மிக்க வலிமையுடனும் வாழுகின்றன. (மனமகிழ்ச்சியே அதன் காரணம்). (௪௦)

எல்லாப் பிராணிகளுக்கும், ஊணு முறக்கமும் கலவியும் அச்சமும் பொதுவானது. அதில் மானிடருக்குச் சிறப்பு-அறிவு, ஈதல், இரக்கம், பொறுமை இவைகளாம். (௪௧)

நல்வினை, வாய்மை, இரக்கம், ஈதல், அமைதி, பொறுமை, புலன்களையடக்குதல், மனத்தையடக்குதல், இவை யாவும் மறு உலகத்திற்கான வழியுணவுகளாம். (வழி நடப்பவன் கட்டுச்சோற்றை எடுத்துச்செல்லவேண்டும். ஆனால் இவை அவ்வாறல்ல.) உடையவன் முன்னே செல்லத் தாமாகவே அவனைத் தொடர்ந்து செல்லும். (௪௨)

ஈதலிற் சிறந்ததொரு தருமமில்லை. ஈதலில் மிக்கதொரு புகழில்லை. நற்குணங்கள் யாவும் தானத்திலேயே அடங்கி ஒன்றியுள்ளன. ஆதலால் ஈவதிலேயே ஊக்கங்கொள்ளல் வேண்டும். (௪௩)

முற்பிறவியிற் செய்த புண்ணியத்தினால் செல்வம் சேர்கின்றது. ஈதலொன்றே அதனைப் பயனுறச் செய்யும். அதுவும், பொறுமையுடனும், தகுந்த சற்பாத்திரத்திலும் அமையுமாகில் பெரும்பயனைத் தரும். (௪௪)

दानात् ख्यातिं यथाऽऽप्नोति न तथा बलविक्रमैः ।
स्तुवन्ति दाना त्कर्णन्तु न तथा फल्गुनं जनाः ॥ ४५ ॥

मानुषं दुर्लभं जन्म बहुपुण्येन लभ्यते ।
साधनीयं हितं तत्र येन सद्गति माप्नुयात् ॥ ४६ ॥

सुखा न्मद मवाप्नोति दुःखा दुद्विजते जनः ।
सुखं दुःखं समं यस्य स एव धृतिमान्नरः ॥ ४७ ॥

अतिस्नेहो न कर्तव्यः पुत्रदारधनादिषु ।
अतिस्नेहेन दीपोऽपि याति निर्वाणतां क्षणात् ॥ ४८ ॥

अशाश्वते नवच्छिद्रे शरीरेऽस्मिन् रतिं त्यज ।
चिरस्थायिनि संशुद्धे यशःकाये मतिं कुरु ॥ ४९ ॥

(ஒருவன்) ஈவதினால் எவ்வாறு புகழடைகின்றானோ, அவ்வாறு வலிமையினாலும் வீரியத்தினாலும் அடைய இயலாது. கொடைவள்ளலாகிய கர்ணனை மக்கள் எவ்வாறு புகழ்கின்றனரோ அவ்வாறு அர்ச்சுனனைப் புகழுவதில்லை. (௪௫)

மானிடப்பிறவி பெறற்கரிது. பெரும் புண்ணியத்தாலேயே அது கிடைக்கின்றது. அதனால் நற்கதியைப் பெறுவதற்கான நன்மைகளைத் தவறாமல் சாதித்துக்கொள்ள வேண்டும். (௪௬)

மக்களுக்குச் சுகம் உண்டானால், அதனால் அவர்கள் செருக்குற்றவராகின்றனர். துன்பத்தைக்கண்டு நடுங்குகின்றனர். இது உலகியற்கை. சுகமும் துக்கமும் எவனுக்குச் சமமாகவேயிருக்கின்றதோ, அவனே மானிடருள் உறுதியுள்ளவன். (௪௭)

மகன்–மனைவி–செல்வம் இவைபோன்றவற்றில் அளவு கடந்த பற்றுதல் (அதிஸ்நேஹம்) கொள்ளுதல் தகாது. அதிஸ்நேகத்தினால் (எண்ணை மிகுதியினால்) விளக்குங்கூட ஒரு விநாடியில் அணைந்துவிடும் தன்மையை அடைகின்றது. (ஸ்நேஹம்–என்னும் சொல், பற்றுதல்–எண்ணை–இவையிரண்டுக்கும் பெயர்). (௪௮)

நிலையில்லாததும் ஒன்பது ஓட்டைகளுள்ளதுமாகிய இம்மானிட யாக்கையில் அன்புகொள்ளாதே. நிலையானதும் தூயதுமாகிய புகழுடம்பில் நாட்டங்கொள். (௪௯)

स्ववशे वर्तते जिह्वा क्रियतां हरिकीर्तनम् ।
वाचालता किमर्थं वै क्रियते श्रुतिदूषणी ॥ ५० ॥

वृथा मौनं न धर्तव्यं वाचालत्वं परित्यजेत् ।
वक्तव्यं मधुरं स्वल्पं पण्डितैः समयोचितम् ॥ ५१ ॥

प्रिया वाक् चेन्मनुष्यस्य तस्य सर्वेऽपि बांधवाः ।
सा चेदपूर्वा भवति रिपवः सर्वतो जनाः ॥ ५२ ॥

अनृतं नैव वक्तव्यं महता मान मिच्छता ।
दृष्ट्वा ह्यनृतवक्तारं सर्वो ह्युद्विजते जनः ॥ ५३ ॥

वासःस्रग्भूषणादीनि भूषयन्त्यबुधं नरम् ।
बुधं भूषयते भाषा विबुधै रभिभाषिता ॥ ५४ ॥

धनं माता पिता बंधु र्भार्या पुत्रः सखा सुहृत् ।

தன் வசத்திலேயே இருக்கின்றது நாக்கு. திருமாலின் திருநாமங்களைச் சொல்லுங்கள். காதுகளைக் கெடுக்கும் வகையில் வளவளப்பான பேச்சுக்களால் வாக்குவன்மையைக் காட்டுவதெதற்கு? (௫0)

வீணாக மௌனம் (வாய் திறவாதிருப்பது) சாதிப்பதும் நன்றன்று. வளவளப்பான பேச்சும் தகாது. சமயத்திற்கேற்றவாறு இனிமையாகவும் இட்டமாகவும் பேசவேண்டும். இதுவே அறிவாளிகளுக்குத்தகும். (௫க)

ஒருவனுக்கு, இனிய சொல் உண்டாயின் அவனுக்கு எல்லோரும் உறவினராவார்கள். அது அரிதாயின் (அபூர்வமானால்—அ—என்னும் எழுத்தை முன்னால் உடையதானால்—அப்ரியமானால்—என்றபடி) எல்லோரும் பகைவர்களாவார்கள்.

மானத்தைக்காக்க விரும்பும் மேன்மையானவன் ஒருகாலும் பொய் சொல்லக்கூடாது. பொய் சொல்பவனைக் கண்டதுமே மக்கள் யாவரும் நடுங்குகின்றனர். (௫௩)

ஆடைகள், மாலைகள், அணிகள், இவைபோன்ற பொருள்கள் அறிவிலியான மனிதனை அழகு செய்கின்றன. அறிவாளியானவனையோவெனில், புலவர்களால் (தேவர்களால்) பேசப்படுகின்ற மொழியே அலங்கரிக்கின்றது. (௫௪)

धने तु सुगुणा स्सर्वे तस्मा द्धन मुपार्जयेत् ॥ ५५ ॥

याचकस्य मुखं दृष्ट्वा सर्वे बिभ्यति वै जनाः ।
नायातौ वसुधां तस्मा त्कामधेनुसुरद्रुमौ ॥ ५६ ॥

दत्तं चेत् क्षीणतां याति प्रयत्ना दार्जितं धनम् ।
विद्याधन मपूर्वं हि दत्तं दत्तं प्रवर्धते ॥ ५७ ॥

पुराणश्रवणं सद्भिः संवासः शंभुपूजनम् ।
वेदान्तचर्चा सततं दुःखोन्मूलनहेतवः ॥ ५८ ॥

व्रतं विना ब्रह्मचर्यं गार्हस्थ्यं रमणीं विना ।
न शोभते द्विजातीनां संन्यासो विरतिं विना ॥ ५९ ॥

मनुजस्य सुवृत्तस्य गृहे चेदबला खला ।
लोकेऽस्मिन्नेव स पुमान् निरये पतितो ध्रुवम् ॥ ६० ॥

செல்வம் (பொருள்) ஒன்றே; தாய், தந்தை, உறவினர், இல்லாள், மகன், தோழன், சினேகிதன், இவையெல்லாமாகும். நற்குணங்கள் யாவும் பொருளிலேயே உள்ளன. அதனால் பொருளையே தேடவேண்டும். (௫௫)

இரப்பவனுடைய முகத்தைக் கண்டமாத்திரத்தில் மக்கள் யாவரும் அச்சமுறுகின்றனர். அதனாலேயே காமதேனுவும் கற்பக மரமும் பூமிக்கு வரவில்லை போலும். (௫௬)

பெருமுயற்சியால் தேடப்பட்ட பொருள், (பிறருக்கு)க் கொடுப்பதனால் அழிந்துவிடுகின்றது. ஆனால் கல்விச்செல்வம் அவ்வாறுவதில்லை. இது கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டேயிருக்கும். என்ன ஆச்சரியம்! (௫௭)

புராணங்களைக் கேட்பது, நல்லோர்களுடன் கூடியிருத்தல், சிவபூஜை, எக்காலமும் வேதாந்த விஷயங்களையே நன்கு சிந்தனைசெய்து அறிஞர்களுடன் சர்ச்சை செய்தல், இவையெல்லாம் துன்பங்களை வேருடன் களைந்துவிட வல்லன.

வேத விரதங்களில்லாத பிரம்மசரியாசிரமமும், மனையாட்டி இல்லாத இல்லறமும், வைராக்கியம் (அவாவறுத்தல்) இல்லாத துறவும் த்விஜர்களுக்குச் சிறப்புற்று விளங்காது. (௫௯)

நல்லொழுக்கமுள்ள ஒருவனுடைய வீட்டில் தீயவளான மனைவி அமைந்துவிட்டாளாயின், அவன் இவ்வுலகத்திலேயே நரகத்தில் வீழ்ந்தவனாவான். திண்ணம். (௬௦)

used to form nouns from nouns, and also the terminations for declining nouns (4-1-2) and then for conjugating verbs (3-4-78). In this portion are also included the terminations for forming a feminine base from the masculine. These feminine suffixes though differentiated by various 'Its' are of the form of either long आ or long ई.

Introduction :— The English word termination implies that they should terminate or come after a base.

The following special Sūtra provides for it :—

S221 परश्च 3-1-2 (S. K. 181) And subsequent also. अयमपि तथा। This is also as above. (i. e.) This also is an Adhikāra Sūtra and governs all Sūtras till the ending of the 5th Adhyāya.

Note :— The force of the word च (also) is said to indicate that these differ from certain Uṇādi terminations which may be prefixed or inserted in the middle.

A (2) *Prātipadika (nominl base).*

Introductory note:— Of the two kinds of bases a verbal and a nominal base, the former defined as 'Dhātus' that are included in a list called Dhātupāṭha to which a fuller reference will be made when we come to 'verbs'. The nominal bases are defined by :—

S 222. अर्थवदधातुरप्रत्ययः प्रातिपदिकम्। 1-2-45-already explained in-21 ante.

Note :— The affirmative portion of the definition is 'अर्थवच्छब्दस्वरूपं प्रातिपदिकसंज्ञं स्यात्' (i. e.) Any sound having a meaning is known as Prātipadika. This obviously is too wide for it will include 'verbs' and terminations which are sounds with meanings.

To exclude them the negative portions viz., अधातुः and अप्रत्ययः are necessary. The first can be split into न धातुः = अधातुः meaning that which is not a Dhātu, and अप्रत्ययः is similarly न प्रत्ययः = अप्रत्ययः. Even after excluding these two the definition is too wide; for take the form डित्थः the nominative singular, and गच्छति the third person singular of गम् (to go). These two have meanings and they are neither Dhātus nor terminations.

So they would come under the definition of Prātipadika. If we accept their inclusion, then it follows they could be declined like a noun which is not allowed, because to the fully evolved word डित्थः you cannot add another declensional termination; nor to गच्छति another conjugational termination. To exclude words that end in terminations the word "Apratyaya" is construed as a Bahuvrīhi compound thus. First we interpret Pratyaya (प्रत्ययः) as प्रत्ययः अन्ते यस्य सः = प्रत्ययः (Pratyaya) and then न प्रत्ययः = अप्रत्ययः. In this view डित्थ and गच्छति cease to be Prātipadīkas.

It is thus necessary to have two meanings for the word अप्रत्यय viz., (1) That which is not a Pratyaya and (2) That which does not end in a Pratyaya. Hence the Vṛtti excludes all the three a root, a termination, and that which ends in a termination.

Introduction:—The extension of the word अप्रत्यय to cover bases which end in terminations leads to an untoward result in another direction. We have already noticed that verbal derivatives called "Kṛts" and derivatives form nouns called Taddhitas are liable to declension like any other nominal base; but as these end in terminations they will be excluded from the definition of Prātipadikas.

Again Sanskrit compounds are formed by the agglutination of words. These agglutinations are finished off with certain special terminations called समासान्ताः (vide 5-4-68 Rt. seq.) These can also be declined but these will also be excluded for the reason given above. This is rectified by their express inclusion under the definition of Prātipadikas by the Sūtra :—

§ 223. कृत्तद्धितसमासाश्च 1—2—46 (S. K. 179) (See § 23 ante) पूर्वसूत्रेण सिद्धे समासग्रहणं नियमार्थम्। यत्र संघाते पूर्वो भागः पदं तस्य चेद्भवति तर्हि समासस्यैव ।

These terminations are to be added to Prātipadikas. This is provided by :—

§ 224. ङ्याप्प्रातिपदिकात् 4-1-1. (S. K. 182) ङ्यन्तादाबन्तात्प्रातिपदिकाच्चेत्या-पञ्चमपरिसमाप्तेरधिकारोऽयम् ।

This is a governing rule till the end of the 5th Adhyāya and means "after a base ending in ङी or आप् or a Prātipadika."

Note:—The title ङी represents the feminine terminations ङीप्, ङीन् or ङीष् and आप् stands for the feminine terminations चाप्–टाप् or डाप्.

The Sūtra therefore means that whatever terminations occur in the Aṣṭādhyāyī between this Sūtra and the end of the 5th Adhyāya are liable to be added to a base ending in the feminine termination of the form of ई or आ, or after a Prātipadika.

Question:–There is a feminine termination ऊङ्. Why is this omitted?

Answer:–This point is discussed in the Bālamanōramā P 112 & 113. It is only in cases of bases ending in ई or आ (feminine terminations) that a difficulty arises–not in the case of feminine terminations ending in ऊ. Vṛtti continued— "प्रातिपदिकग्रहणे लिंगविशिष्टस्यापि ग्रहणम्" इत्येव सिद्धे ङ्याब्ग्रहणं ङ्याबन्तात तद्धितोत्पत्तिर्यथा स्यात् ङ्याभ्यां प्राङ्माभूदित्येवमर्थम् ।

There is a recognised convention of the form quoted. It means that any operation directed of a base applies to a base ending in a termination denoting gender. While so the special mention (in fact repetition) of ई & आ in the Sūtra is to indicate that if a Taddhita word is to be formed the necessary termination should be added after the feminine terminations are added and not before.

Note:—These feminine terminations as also the Taddhita terminations are included in the portion of this Aṣṭādhyāyī (i. e.) between 3–1–1 and the end of the 5th Adhyāya. If the Sūtra had omitted to mention ङी & आ, the doubt may arise whether taking a particular base we should add the feminine affix first and then a Taddhita or vice versa. This doubt is set at rest by specially mentioning the feminine terminations.

Various kinds of bases.

There are various kinds of bases which lead to different grammatical results. We have already noticed that Pada is a full fledged word. See S 24. But there is a Pada which is not full-fledged and which will be referred to later on. So also a kind of base known as "Bha". But a base to which the name of Aṅga applies is of considerable importance and will be noticed first; the other will be noticed after the terminations under the heading "Various Kinds of Terminations".

(a) What is an Aṅga?

Note:—An Aṅga is a special kind of base with special consequences. It is treated in the Aṣṭādhyāyī from 6—4—1 onwards, till the end of the seventh Adhyāya. The result of a base being an Aṅga cannot be gathered in one place but will be noticed as the occasion arises. The Sūtra defining it:—

S 235 यस्मात्प्रत्ययविधिस्तदादिप्रत्ययेऽङ्गम् 1-4-13. (S. K. 199) यः प्रत्ययो यस्मात्क्रियते तदादि शब्दस्वरूपम् तस्मिन् प्रत्यये परे अङ्गसंज्ञं स्यात् ।

Translation:—Where a termination is ordained after something, that something or a thing which begins with that something is called an "Aṅga" when the termination is in position thereafter.

Note:—(1) This "Aṅga" is wider than Prātipadika because it includes Verb (Dhātu) also.

(Text) विकरणविशिष्टस्याङ्गसंज्ञार्थं तदादिग्रहणम् ।

Note:— The expression तदादि शब्दस्वरूपम् – a thing beginning with that something, will be understood as necessary for the following consideration. In conjugating verbs this is what happens. Taking the verb भू (to be) the equation stands thus:—

Root		Conjugational sign		Termination
भू	+	अ	+	(sing) मि.

Now भू + अ becomes भव and then we have भव+मि. Now there is a Sūtra to be noticed later by which the अ of भव will be lengthened only if भव is an 'Aṅga'. In the equation given above the conjugational sign अ is ordained after a root. So the अ will confer the designation of Aṅga on भू, and by Sandhi rules we get भव. This however will not be an Aṅga according to the theory of adding conjugational terminations which is too big a topic to be anticipated. It will be dealt with fully when we come to Verbs.

Suffice it at present to say that the मि has the plan of लट् (Present) which also is added after a Dhātu. Now in the equation as it stands भव + मि, मि cannot confer the designation of अङ्ग on भव, for it is ordained after भू and not after it has been transformed into भव. But भव though not भू (the root) begins with the root. Therefore if we insert in the

definition the phrase 'that which begins with it' the expression भव is covered by this definition, for भव is तदादि when तत् refers to the root. So तदादि is split as a Bahuvrīhi compound for the above purpose. तत् आदिः यस्य when तत् is the verb भू. The Sūtra must be understood therefore as two definitions rolled into (1) यस्मात् प्रत्ययविधिः तदङ्गम्, and (2) यस्मात् प्रत्ययविधिः तदादि अङ्गम्. If we understand the second as the only definition then the root will be excluded. The other expression 'प्रत्यये परे' may now be examined. It means 'when the Pratyaya is subsequent'. It should be understood however as a condition meaning 'so long as the termination continues subsequent' or 'is in position'. In other words, if it is dropped the designation of Aṅga also vanishes.

This will be clear by taking an example. We can compound the two words स्त्रियै and अर्थम् – which mean 'for the sake of a woman'. In compounding the dative termination of स्त्रियै will be dropped and the two words will be brought together, then स्त्री + अर्थम्. Now if स्त्री were an Aṅga, the final ई will be changed to इय् by the Sūtra अचि श्नुधातुभ्रुवां य्वोरियङुवङौ – 6-4-77. In fact the form स्त्रियै was obtained because the equation was स्त्री + ऐ (आ + ए). As in forming the compound the termination ए vanishes, the base स्त्री ceases to be an Aṅga, because the termination is not in position, and so the ordinary Sandhi rule applies and the ई is changed to य् giving स्त्र्यर्थं. No doubt as the Sūtra is worded there is no direct reason for imparting a condition. It is however inferred from the repetition of the word प्रत्यय in the Sūtra. There is another point to be noticed viz., the use of the word विधिः in प्रत्ययविधिः. विधीयते इति विधिः. So the termination should be ordained after the base. If instead of being ordained a termination should come in, say, casually it will not confer the name of Aṅga on what precedes. The following example will make the point clear.

In compounding the two words दधि and अधुना, to express the meaning 'curd now' the equation is दधि + अधुना. Here अधुना is a termination as explained in the foot-note. But अधुना is not ordained after दधि. So it does not make दधि an Aṅga. So the इ of दधि is not changed to इय् but the ordinary Sandhi rule applies changing the इ to य् giving दध्यधुना.

Foot-note (1) By the Sūtra 'अद्युना' (5–3–17) S. K. 1966, the termination अधुना is directed to be added to the word इदम् when 'time is meant'. So we get इदम + अधुना. Then by the Sūtra इदम इश् (5–3–3) S. K. 1949 इ is substituted for इदम् giving इ + अधुना. Then by यस्येति च 6–4–148 (S. K. 311) the इ is elided (because अधुना is a Taddhita affix) giving O + अधुना. Hence अधुना is a termination meaning 'Now'.

Foot-note (2) The change of the इ of दाधि into इय् will take place only if दधि is a derivation from a verb (see 6–4–77). It is derived from root No. 1022 डुधाञ् - धारणपोषणयोः. By the Vārtika "भाषायां धाञ् कृ सृ गमि जनि नमिभ्यः (2143) the termination कि is added giving धा + कि. Then by आदृगमहनजनः किकनौ लिट् च – 3–2–17 । (S. K. 3151) the termination कि has the characteristic of the Perfect; hence there is reduplication.

Foot-note (3) विधीयते इति विधिः । So the termination should have been ordained. In the text the example taken is स्त्री + इयती, where इयती is a termination. If इयती had been ordained after स्त्री there would be इयङ् giving स्त्रिय् + इयती. As it has not been ordained there is no इयङ्. I have taken another example to illustrate this point viz., दधि + अधुना.

Declensional Terminations.

Having thus seen that a word consists of a base which stands first and a termination which comes after, we may proceed to the enumeration of the terminations which are employed in Declension. The following Sūtra enumerates them :—

S 226. स्वौजसमौट्शष्टाभ्याम्भिस्ङेभ्याम्भ्यस्ङसिभ्याम्भ्यस्ङसोसांङ्योस्सुप् । 4-1-2 (S. K. 183) ङ्यन्तादाबन्तात्प्रातिपदिकाच्च परे स्वादयः प्रत्ययाः स्युः । सुङस्योरुकार-कारौ, जशटङपाश्चेतः ।

Translation:— सु and others are terminations (to be employed) after bases ending in ङी or आप् or after a Prātipadika. Among them the following are 'Its' viz., the उ of सु, the इ of ङसि, and the (consonants) ज् श् ट् ङ् and प्.

Introductory note:— In what follows I propose to give two Tables In one of them the above Sūtra is dismembered and the terminations with

the 'Its' are given. In the other the terminations divested of the 'Its' are given. At the end of each series of terminations the name of the case is given. The Sūtras which define the 'Its' are given at the end. The number of each Sūtra is added to those terminations of the I Table to which they apply:

Table–I				Table–II		
सु[2]	औ	जस्[5,3]	Nominative	स्	औ	अस् — प्रथमाविभक्ति
अम्[3]	औट्[1]	शस्[4,3]	Accusative	अम्	,,	,, — द्वितीया ,,
टा[5]	भ्याम्[3]	भिस्[3]	Instrumental	आ	भ्याम्	भिस् — तृतीया ,,
ङे[4]	भ्याम्[3]	भ्यस्[3]	Dative	ए	,,	भ्यस् — चतुर्थी ,,
ङसि[4,2]	,,[3]	,,[3]	Ablative	अस्	,,	,, — पञ्चमी ,,
ङस्[4,3]	ओस्[3]	आम्[3]	Genitive	,,	ओस्	आम् — षष्ठी ,,
ङि[4]	,,[3]	सुप्[1]	Locative	इ	,,	सुप् — सप्तमी ,,
सु	औ	जस्	Vocative	स्	औ	अस्-संबोधनप्रथमा ,,

What a Vibhakti is see later.

Expn. 1.— The 'Its' in the above are determined by the following Sūtras :—

(1) हलन्त्यम् । 1-3-3. Already noticed in s 2 ante. As this sūtra is an Upades'a as also each of the terminations, this rule applies to the accusative dual and the locative plural.

(2) उपदेशेऽजनुनासिक इत् । 1-3-2. Already noticed in s (1) ante. This applies to the उ of सु (Nom. sing) and the इ of ङसि which are the only vowels pronounced with nasal intonation. The others are not so pronounced.

(3) s 227 न विभक्तौ तुस्माः 1-3-4 (S. K. 190) विभक्तिस्थाः तवर्गसकारमकाराः

इतो न स्युः । (clear). Were it not for this sūtra, हलन्त्यम् would apply to all the final consonants marked (3).

(4) S 228 लशक्वतद्धिते 1-3-8 (S. K. 195) तद्धितवर्जप्रत्ययाद्याः ल श कवर्गाः इतः स्युः ।

Except in the case of Taddhita Terminations ल श or any letter of the क group (beginning a termination) is an 'It'. This results in the dropping of श् of the accusative plural, and the ङ् of the singular of the 4th, 5th, 6th and 7th cases, for it belongs to the क group.

(5) S 229 चुटू—1-3-7 (S. K. 189) प्रत्ययाद्यौ चुटू इतौ स्तः ।

Any letter of the च and ट group beginning a termination is an 'It'. This results in the dropping of the ट् of the Instrumental singular, and the ज् of the Nominative plural.

Note:—The beginning letter of the sūtra 4-1-2 viz. सु, joined to प् the last 'It' of that Sūtra gives the Pratyāhāra सुप् which represents all declensional terminations. This is referred to in the Sūtra सुप्तिङन्तं पदम् । See S 24 ante.

Expn. (2) *The names and meanings of the Terminations:*—

It appears from the Table above that each Vibhakti has got three terminations. The Vibhaktis have got their meanings which is treated in the II Adhyāya III Pāda. This constitutes the important subject of syntax and is treated separately under the heading 'Kāraka Prakaraṇam' which plan will be followed here. Each of the triplets of a Vibhakti has got its own name viz. एकवचनम्, द्विवचनम्, and बहुवचनम्. Both these names विभक्ति and वचनम् are common to Nouns and Verbs (i. e.) to the declensional and conjugational terminations, and are treated in the III Adhyāya IV Pāda. The names given first to conjugational terminations, are extended to Nouns also.

The Sūtras bearing on the declension are :—

S 230. सुपः 1-4-103 (S. K. 185) सुपः त्रीणित्रीणि वचनानि एकशः 'एकवचन' 'द्विवचन' 'बहुवचन' संज्ञानि स्युः ।

(இ-ள்) ஈரல் பக்கத்தில் வலியுண்டாகும். குடல் புரட்டல் உண்டாகும். மலம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகும். வாயு வதிகரிக்கும். சாப்பிட்ட ஆகாரம் உடலில் சேராது. இவை பக்குவாசய பித்த லக்ஷணங்கள்.

ஆமாசய பித்தம்.

தொடுத்திடு கொப்புளமேலாய்ச் சுழன்றழந் தெரித்துக்காட்டும்
குடித்திடு மன்னந் தண்ணீர் குமட்டியேயெடுத்துக்கொட்டும்
கடுத்திடு மிளைப்புண்டாகுங் காதுசில் லெனவடைக்கும்
எடுத்திடுங் குணங்களாமா சயபித்த மென்னலாமே. (6)

(இ-ள்) வயிற்றின் மேல் சிறு சிறு கொப்புளங்களேற்பட்டு எரிச்சலும் உண்டாகும். சாப்பிட்ட சோறு தண்ணீர் முதலியவைகளை வாந்தி செய்விக்கும். உடலில் கடுப்பு வலியேற்படும். தேஹம் இளைத்துவிடும். காது சில் லிட்டுப்போம், இவை ஆமாசய பித்தக்குறிகளாகும்.

மலாசய பித்தம்.

மிகக்கனத் துதரம் நொந்து மேனியுங்கருகிவாடி
யிகற்படும் புசிப்புறுமல் மலத்திறு டிறுக்கிக்காட்டும்
தகைப்பொடு தாகமுண்டாஞ் சரீரத்திற் சூடுமுண்டாம்
வகைப்படு குணங்கள் கண்டால் மலாசய பித்தமென்னே. (7)

(இ-ள்) வயிறு மிகவும் கனத்து, வலியும் உண்டாகும். உடல் கருமை நிறத்துடன் சோர்வடையும். சாப்பாடு உட்செல்லாமல் மலச்சிக்கலுண்டாகும். தாங்கமுடியாத தாகமேற்படும். தேகத்தில் சூடு மதிகரிக்கும். இவை மலாசய பித்தக்குறிகளாகும்.

சய பித்தம்

ஓர்ந்திடுஞ் சரீரம் காந்தும் உழன்றழன் றருவிநீர்போல்
வார்ந்திடு மூத்திரந்தான் மஞ்சளின் வண்ணமாகுஞ்
சேர்ந்தரு கிலையா லெண்ணத் துளிவிடிற்சிதறிப்பாயுஞ்
சோர்ந்தவிக் குணங்களெல்லாஞ் சயபித்த......மென்னே. (8)

(இ-ள்) சரீரத்தில் எரிச்சலும் அருவித்தண்ணீர்போல வியர்வையும் உண்டாகும். மூத்திரம் மஞ்சள் நிறமாக இறங்கும். ஒரு அருகு இலையினால் நல்லெண்ணெயைச் சிறுநீரில் விட்டால் எண்ணெய் சிதறிவிடும். இவை சய பித்தக்குறிகளாகும்.

இரத்த பித்தக் குறிகள்.

சலத்துவா ரத்தினாலே தருமலத் துவாரத்தாலே
வலுத்த நீண் மூக்கினாலே வறிவிழி வாயினாலே
பெலத்துவா ரத்தினீர்போற் பெருகிடுமிரத்த மென்னிற்
சொலத்தகா விரத்த பித்த மிதுவெனச் சொல்லலாமே. (9)

(இ-ள்) மூத்திர த்வாரத்தின் மூலமாகவும், மல த்வாரத்தின் மூலமாகவும், மூக்கு, கண்கள், வாய் முதலான உறுப்புக்களின் மூலமாகவும், அருவி நீர்போல் இரத்தம் தாரையாகப் பொழியும். இவை இரத்தப் பித்த நோயின் குறிகளாகும்.

மாங்கிஷ பித்தம்.

தாங்கிடுஞ் சூடுதானே சரீரத்திற் சதையைத் தாவி
வீங்கிடும் வற்றுந் தேகம் வளர்நிறம் வேறுகாணும்
பாங்குறு நகங்கண்ணுவு பசுநிறம் பெறுமேயாகில்
மாங்கிஷ பித்தமென்றே வகுத்தனர் மருத்துநூலோர். (10)

(இ-ள்) தேகத்திலுள்ள சூடு சதையை ஆக்ரமித்து வீக்கத்தை யுண்டாக்கிப் பின்னர் வற்றவைக்கும். நிறம் வேறுபாடும் உண்டாகும். நகம், கண்கள், நாக்கு முதலான உறுப்புக்கள் பச்சை நிறமாகும். இவை மாங்கிஷ பித்தக் குறிகளாகும்.

மேதோ பித்தக் குறிகள்.

ஒருபாதி யுலர்ந்தரைக்கீ ழொருபாதி பொருமிக்காணுந்
தருபீதவன்னமாகச் சாருங்கா மாலைபாண்டு
உருவாகுந் தாதுமாயும் உறுபலந் தருகுமாகில்
வருமேத பித்தமென்றே வகுத்தனர் ஆயுள் நூலோர் (11)

(இ-ள்) உடலின் கீழ்பாகம் (தொப்புள்முதல் சணுக்கால்வரை) வீக்கத்துடனும், மேல்பாதி இளைத்தும் காணும். உடல் பச்சை நிறமாகத் தோன்றும். காமாலை, பாண்டு முதலான நோய்களுக்குக் காரணமாகும். தாது க்ஷீணமுண்டாகும். இவை மேதோபித்தக் குறிகளாகும்.

அஸ்தி பித்தக்குறி குணங்கள்.

பத்திரமாகச் சந்திற் றுடையினி லென்பிற் பற்றித்
தத்திறமாக் காந்துஞ் சரீரமுந் தளர்ச்சி யாகுஞ்
சித்திரமாகத் தண்ணீர் உழலையாய் நீர் சிவக்கும்
அத்தியிற் பித்தரோக மிதுவென ஆயுள் நூலே. (12)

(இ-ள்) மூட்டுகள், துடையெலும்பு இவைகளை பித்தம் பற்றி எரிச்சலை யும், தளர்ச்சியையும் கொடுக்கும். தண்ணீர் தாகமுண்டாகும். சிறுநீர் சிவந்து இறங்கும். இவை அஸ்திபித்தத்தின் குறிகள்.

மச்சை பித்தம்.

இச்சையிற் சுக்கிலங்கெட் டியல்பெறு முடம்புவற்றி
அச்சமாய்த் துயிலும்போது கனவுகண் டரற்றலாகுந்
துச்சமாங் கர்ப்பந் தங்கிற் றுயரமா யழியுமென்னில்
மச்சையின் பித்தமென்றே வகுத்தனர் மறைவல்லோரே. (13)

(இ-ள்) அதிகமாகச் சுக்கிலம் வெளியாகி உடம்பு இளைக்கும். தூங்கும் போது கெட்ட ஸ்வப்னங்கள் கண்டு உளருவான். ஸ்திரீகளுக்கெனில் கர்ப்பம் சிறிது காலந்தரித்துப் பின்னர் அழியும். இவை மச்சை பித்தரோகக் குறிகளாகும்.

சுக்கில பித்தம்.

தக்கதாங் கர்ப்பந்தன்னைத் தவிர்த்திடுங் கனவு தன்னிற்
கக்கிடுஞ் சுக்கிலத்தைச் சுக்கில நாளங் காந்தும்
மிக்கசுக் கிலம்போல்நீரில் வெள்ளையுங் காணுங்கண்டாற்
சுக்கிலபித்தமென்றே சொல்லினர் சுருதிவல்லோர். (14)

(இ-ள்) கர்ப்பம் தரிக்க இயலாது. தூக்கத்தில் சுக்கிலம் வெளியாகும். சுக்கில நாளத்தில் எரிச்சலெடுக்கும். சுக்கிலத்தை நீரில் விட்டால் அது வெண்மையாக மிதக்கும். இவை சுக்கிலபித்த லக்ஷணங்களாகும்.

சுரோணித பித்தம்.

மெல்லியல் முழுக்குநாளில் விதனமுமெரிவுமுண்டாம்
புல்லிய சங்கத்தன்னிற் பொருமையாய் மயக்கமுண்டா
மல்லிய கர்ப்பந்தன்னை யழித்திடுமுடம்புவற்றுஞ்
சொல்லிய குணங்கள் கண்டாற் சோணித பித்தமாமே. (15)

(இ-ள்) தீட்டாகி ஸ்நானம் செய்யும் தினங்களில் வலியும் எரிச்சலு முண்டாகும். சங்கமத்தின்போது மயக்கமுண்டாகும். கர்ப்பத்தை அழித்து விடும். உடம்பு இளைக்கும். இவைகள் சோணித பித்தக் குறிகளாகும்.

சந்திகத பித்தம்.

மிக்குள பொருத்துத் தோறும் விதனமுங் கடுப்புமுண்டாம்
தொக்கினில் நிறமுங்கெட்டு நடந்திடிற் றுயரமாகுஞ்

சிக்கிடு மலசலங்கள் சிந்திடிற் சிவந்துகாணு
மிக்குண மாகிற்சந்தி கதபித்த மென்னலாமே. (16)

(இ-ள்) ஒவ்வொரு மூட்டுகளிலும் கடுப்பும் எரிச்சலும் உண்டாகும். தோலின் நிறம் வேறுபாடடையும் நடந்தால் வேதனையுண்டாகும். மலம், மூத்திரம் இவை செந்நிறமாக இறங்கும். இவை ஸந்திகத பித்த லக்ஷணங்களாகும்.

உதர பித்தம்.

தீதறக் கொண்ட வன்னஞ் செரித்துடல் தரித்திடாது
வாதையாய் வயிறு நொந்து பொருமியே மயக்கங்காணும்
போதவே தண்ணீர் வாங்கும் பொருந்துடல் கரிந்துவாடு
மோதிய குணங்களாகி லுதரத்திற் பித்தமென்னே. (17)

(இ-ள்) கெடுதலில்லாத ஆகாரத்தை உட்கொண்டாலும் அது செரித்து உடலில் சேராது. வயிற்றில் வலியுண்டாகும். பொருமல், மயக்கம், அடிக்கடி தண்ணீர் தாகம், உடலில் கருநிறம், வாட்டம் முதலான குறிகளும் உண்டாகும். இவை உதரபித்தக் குறிகளாம்.

வாத பித்தம்.

சொலற்கரி தானமேனி சுரங்குளிர் துயரமுண்டாம்
விலக்கரி தானவன்னம் வெறுத்திடும் அருசியுண்டாம்
சலித்துட லயர்ந்து நொந்து தளர்ச்சியாயுதரந்தன்னை
வலித்தழன் றெரித்துக் காந்தி வாதத்திற் பித்தமாமே. (18)

(இ-ள்) உடலில் குளிர்சுரம், வேதனை இவைகளுண்டாகும். ஆகாரத்தைத்தள்ளும். அருசியேற்படும். உடல் வாட்டம் அடையும். வயிற்றில் வலி, எரிச்சல் முதலானவைகளும் உண்டாகும். இவை வாத பித்தக் குறிகளாகும்.

சிலேற்ப பித்தம்.

சீற்றமாய்க் கபமேலிட்டுத் தியங்கிவாய் நீர்சுழற்றி
வேற்றுடல் பட்டு நெஞ்சு வெதும்பியே யறுவருக்கும்
மாற்றமா முடம்பதெல்லா மஞ்சணித் திளைப்புமுண்டாந்
தோற்றிய குணஞ்சிலேற்ப பித்தமாம் தோகைநல்லாய். (19)

